9-102

# கலைச் செல்வி

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை

## பதினெட்டாவது ஆண்டு மலர்

— 1963 —

# கலைச் செல்வி

அரசினர் ஆசிரிய கலாசாலை
மட்டக்களப்பு
பாங்குடன் பயின்று பண்பாடெய்துக

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை

## பதினெட்டாவது ஆண்டு மலர்

## — 1963 —

# கலைச் செல்வி

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை

## பதினெட்டாவது ஆண்டு மலர்

## — 1963 —

# கலைச்செல்வி, 1963.

பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பத்திரிகைக் குழுவினர் | — | 1 |
| வாழ்த்துச் செய்தி | — | 2 |
| பரம்பொருள் வாழ்த்து | — | 3 |
| அதிபரின் அறிவுரை | — | 4 |
| சற்றுப் பொறுங்கள்! | — | 5 |
| எங்கள் விரிவுரையாளர்கள் | — | 7 |
| மட்டக்களப்பு | — | 9 |
| ஓ மேகமே .. ! | — | 10 |
| நாட்டுப்பற்றும் நமது மக்களும் | — | 15 |
| மெய்ப்பாடு | — | 18 |
| கலை அரசி | — | 21 |
| முடிந்த கதை | — | 22 |
| மனிதப் பிறப்பின் மாண்பு | — | 26 |
| பெண்மை | — | 29 |
| செந்தமிழின் பின் சென்ற திருவிளையாடல் | — | 32 |
| தூது ஒன்று செல்வாயா? ..... | — | 35 |
| பாலருக்கு எழுத்துக் கற்பித்தல் | — | 37 |
| பரத நாட்டியம் | — | 40 |
| நேற்று! இன்று!! நாளை!!! | — | 43 |
| ஓங்காரமாய் விளங்கும் நாதன் | — | 45 |
| கிராமிய இலக்கியம் | — | 49 |
| காப்பவள் பெண்மணியே | — | 51 |
| காலத்தின் வஞ்சனை | — | 53 |
| The Teacher of Science | — | 57 |
| The Late Holy Father Our Pope John XXIII | — | 62 |
| இல்ல விளையாட்டுப் போட்டி | — | 67 |
| ஆளுமன்ற அறிக்கை | — | 68 |
| மாணவ தலைவர்கள் | — | 73 |
| முத்தமிழ் மன்ற அறிக்கை | — | 74 |
| பயிற்சி பெற்று வெளியேறுவோர் | — | 76 |
| கலாசாலைக் கீதம் | — | 78 |


1459

அச்சுப் பதிவு:
ரெயின்போ பிரிண்டர்ஸ்
231, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு-13.

## மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை

# பதினெட்டாவது ஆண்டு மலர்

## — 1963 —

### பத்திரிகைக் குழுவினர்:

போஷகர்கள்: திருமதி கங்கேஸ்வரி-கந்தையா (தமிழ் விரிவுரையாளர்)
திரு பி.வி. கணபதிப்பிள்ளை (தமிழ் விரிவுரையாளர்)

தலைவர்கள்: செல்வன் ஆ. கந்தையா
செல்வி க. சின்னப்பிள்ளை

செயலாளர்கள்: செல்வன் ஆ. கனகரத்தினம்
செல்வி எஸ். சீவரத்தினம்

பொருளாளர்கள்: செல்வன் செ. சிவசம்பு
செல்வி த. பாக்கியம்

செயற்குழுவினர்: செல்வன் பொ. தவநாயகம்
,, செ. கந்தசாமி
,, எஸ். வேலுப்பிள்ளை
செல்வி தி. தங்கேஸ்வரி
,, ச. மகேஸ்வரி
,, கே. சௌந்தரியம்மா

இணை ஆசிரியர்கள்: திரு கு. கணபதிப்பிள்ளை
,, ச. தினகரன்பிள்ளை

துணை இணை ஆசிரியர்கள்: திருமதி சாரதாதேவி சிவபாலர்
,, பாக்கியவதி தியாகராசா

பாமலர் ஆசிரியர்: செல்வன் இ. சிவானந்த நாயகம்

## இலங்கை இராமகிருஷ்ண சங்கப் பாடசாலைகளின் முன்னைநாள் முகாமைக்காரர்

# உயர்திரு சுவாமி நடராஜாநந்தர்

அவர்களது வாழ்த்துரை

ஒப்புயர்வற்ற புலமைவாய்ந்த ஒரு விபுலாநந்தரை உலகுக்கு ஈன்றளித்து வான்புகழ் எய்தியது மட்டக்களப்புத் தமிழகம். இந்நாட்டு மக்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகக் காணப்பட்ட போதிலும் சமயம், கலை, கலாச்சாரம், பண்பாடு எனப்படும் அரும் பெரும் நிதியங்களைப் பொன்னே போல் போற்றி வளர்த்து வந்தார்கள். எம்மிடையே ஒரு விபுலாநந்தர் தோன்றுவதற்கு ஏதுவாயிருந்தவை இந்நிதியங்கள்தான் என்பதை நாம் ஒருபோதும் மறத்தலாகாது. சமுதாயச் சூழ்நிலைகள் வெகு வேகத்தில் மாறிக்கொண்டே வருமிக் காலத்திலும் அவர்கள் இந்த நற்பண்புகளின் புனிதத் தன்மையைப் பாதுகாத்து வருகின்றனர்.

எதிர்கால மாணவருலகுக்கு நல்வழி காட்டிகளாகத் திகழப்போகும் ஆசிரிய கலாசாலை மாணவர்கள் என்ற முறையில் இப் புனிதத் தன்மையை மேன்மேலும் ஓங்கச் செய்வது உங்கள் மேற்பொறுத்த கடமையாகும்.

''கலைச் செல்வி'' என்னும் செந்தமிழ் மலர் வெளியீட்டின் மூலம் இப் பணியை ஒருவாறு நிறைவேற்றுகின்றீர்கள். உங்களிடையே மறைந்து கிடக்கும் அறிவு, ஆற்றல், உணர்ச்சி, உத்வேகம் முதலியவற்றைக் கட்டுரை, கவிதை, நாடகம், கதை, சித்திரம் மூலம் வெளியிடுவதற்கு இம் மலரானது உங்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பத்தை அளித்துள்ளது. ''கலைச் செல்வி''யை வாசிக்கும் ஒவ்வொரு இரசிகரும் நமது இளைஞர்களிடையே தோன்றக் கூடிய எதிர்காலக் கம்பன், காளிதாசன், இளங்கோ, வள்ளுவன், செகசிற்பியர் போன்ற மேதைகளின் நவயுக சிருஷ்டிகளைக் கண்டு களிக்கக் கூடியதாயிருக்கும் விபுலாநந்த அடிகளார் பிறந்த நாட்டின் வழித் தோன்றல்களாகிய நீங்கள் ஆற்றும் இந்த இலக்கியப் பணியானது அடிகளார் கண்ட கனவை நனவாக்குகின்றது.

உங்களுடைய இடையறா முயற்சியின் பயனாக வெளிவரும் ''கலைச் செல்வி''யை நாம் மனமார வரவேற்கின்றோம் உங்களுடைய முயற்சி நல் முயற்சியாகுக. இதைத் தொடர்ந்து இன்னும் பல மலர்களை உருவாக்கித் தமிழ் அன்னையை அரியாசனமேற்ற வேண்டுமென்று உங்கள் அனைவரையும் வாயார வாழ்த்துகின்றேன்.

சுவாமி நடராஜாநந்தா

# ★ பரம் பொருள் வாழ்த்து ★

ஆத்திசூடி, இளம்பிறை யணிந்து,
மோனத்திருக்கும் முழு வெண்மேனியான்;
கருநிறங் கொண்டு பாற் கடல் மிசைக்கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை; எனப்பல மதத்தினர்
உருவகத்தாலே உணர்ந்துணராது
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினர்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்.

*   *   *

அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி,
    அகத்திலே அன்பினோர் வெள்ளம்,
பொறிகளின் மீது தனியரசாணை,
    பொழுதெலாம் நினது பேரருளின்
நெறியிலே நாட்டம், கருமயோகத்தில்
    நிலைத்திடல் என்றிவை யருளாய்,
குறிகுணமேதும் இல்லதாய் அனைத்தாய்க்
    குலவிடுதனிப் பரம்பொருளே.

— சுப்பிரமணிய பாரதியார்

# அதிபரின் அறிவுரை

ஒழுங்கு கல்வியின் முக்கிய அங்கமாகும். கல்வி நிலையங்களில் ஒழுங்கைப் பேணும் பணியில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பங்கு உண்டு. ஆசிரியர்கள், மாணவர்களின் வயதுக்கும் பக்குவத்துக்கும் ஏற்ற வகையில் அவர்களுக்கு உரிமைகளை வழங்கப் பின்நிற்கக் கூடாது; மாணவர்கள், தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்யாமல் தங்களுக்கு அளிக்கப்பட்ட சுயேச்சையை யதேச்சையாக்கக் கூடாது. கல்வி நிலையம் ஒரு சிறந்த குடும்பமாக உருவாகவேண்டும். ஆசிரியர்கள் பெற்றோராகவும் மாணவர்கள் குழந்தைகளாகவும் தங்களை ஆக்கி நிலையத்தின் உயர்வுக்கும் சமுதாயத்தின் மேம்பாட்டுக்கும் உழைக்க வேண்டும். குடும்ப மனப்பான்மை ஒன்றுதான் பாடசாலைகளில் ஒழுங்கைப் போற்றிப் பேண வல்லது.

கலைச் செல்விக்கு என் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**க. கந்தையா.**
அதிபர்.

அரசினர் ஆசிரிய கலாசாலை,
மட்டக்களப்பு.
30-3-64.

## -: எங்கள் அதிபர் :-



க. கந்தையா, B. A. அவர்கள்.

# சற்றுப் பொறுங்கள்!

பழந்தமிழ்க்காவலர்களாலும், பாவலர்களாலும் பாராட்டி, தாலாட்டி, சீராட்டி, வளர்த்த நம் தமிழ்ச் செல்வி, எங்கள் கலாசாலைக் "கலைச் செல்வி"யாக மலர்ந்து மணங்கொண்டு, மெருகோடும் பொலிவோடும் அழகு நடை நடந்து, கவிதையென்னும் பாலையும், கட்டுரையென்னும் கன்னலையும், கதையென்னும் பழத்தையும் கலந்து, 18வது ஆண்டு நிறைவுக் கிண்ணத்தில் உங்கள் எண்ணங்களிற் கலக்கிறாள்.

இச் செல்விக்கு ஒளியூட்டி, அணிபூட்டி, மணமூட்டி, மெருகூட்டி உருவாக்கிய செந்தமிழ் ஆசிரியர்கள் அனைவரும் தமிழ் உள்ளவரை பாராட்டுக்குரியவர்கள். இவர்கள் தம் படைப்புகள் உண்மையிலேயே உங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளுமென்பதனால், இம் மலரை உங்கள் மத்தியில் உலாவ விடுவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். எனவே, இத்துணைப் படைப்புகளைத் தந்துதவிய அனைவருக்கும் நாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இலக்கிய வானிலே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சி எங்கள் உள்ளங்களிற் பொங்க, அதற்கேற்ப ஊக்கமும் ஆக்கமும் தந்த எங்கள் அதிபர் அவர்களுக்கும் விரிவுரையாளர்கள் அனைவருக்கும் என்றுங் கடமைப்பாடுடையோம். மேலும், 'கலைச் செல்வி'க்கு மதிப்பாக ஆசிச்செய்திகள் தந்துதவிய அனைவருக்கும், இம்மலர் வெளிவர உறுதுணை புரிந்து ஊக்கமும் ஆக்கமும் நல்கிய எங்கள் பத்திரிகைக் குழுவினருக்கும் எமது இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இன்னும் விளம்பரங்கள் தந்து இம் மலரை விரிவாக்கிய பெருமக்கள் அனைவருக்கும், குறைந்த செலவில் கூடிய விரைவில் இச் செல்வியை அழகுடன் அச்சிட்டுத் தந்த 'ரெயின்போ பிரிண்டர்ஸ்' அச்சகத்தாருக்கும், வேண்டிய புகைப்படங்களை எடுத்துதவி புரிந்த 'ஸ்ருடியோ லேக்' ஸ்தாபனத்தாருக்கும் எங்கள் கலாசாலை சார்பிலும், செயற் குழுவினர் சார்பிலும் எங்கள் நன்றியைக் கூறிக்கொள்ளுகிறோம்.

இப்பணியை நீங்கள் அனைவரும் பாராட்டுவீர்கள் என நம்பி உங்கள்முன் எங்கள் கலைச் செல்வியைச் சமர்ப்பிக்கிறோம். பிழை பொறுத்து உவந்தேற்றல் அறிஞர் பெருமக்கள் கடனாகும்.

*வாழ்க தமிழ்!*

*வளர்க கலைச் செல்வி!!*

**ஆசிரியன்**

ஒழுக்கம் விழுப்பம் தரும்

ஒரு மனிதனின் நடத்தையைப் பார்த்தே, அவன் நல்ல குடிமகனா இல்லையா, வீரனா, கோழையா, போலியா, தூயவனா, இழிந்தவனா என்பதைக் கண்டுகொள்ளலாம்.

இந்த உலகத்தில் சத்தியந்தான் தெய்வம்; சத்தியத்தில்தான் தர்மம் - அறம் - நிலைபெற்றிருக்கிறது.

தீ தீயை (தன் இனத்தை)ச் சுடுவதில்லை (அழிப்பதுமில்லை). —வால்மீகி ராமாயணம்

# அரசினர் ஆசிரிய கலாசாலை மட்டக்களப்பு

## எங்கள் விரிவுரையாளர்கள்

திரு க. கந்தையா, B. A. அதிபர், அவர்கள்.

திரு எஸ். திருஞானசம்பந்தன், B. A. உப அதிபர், அவர்கள்.

திரு பீ. ஈ. டானியல்ஸ், அவர்கள்.

திருமதி எல். டானியல்ஸ் ,,

திருமதி க. கந்தையா ,,

திரு பி. வி. கணபதிப்பிள்ளை ,,

திரு கே. தங்கத்துரை ,,

திரு எஸ். வேலுப்பிள்ளை ,,

திருமதி பீ. காசிநாதர் ,,

திரு எம். கனகசபை ,,

திரு கே. சுந்தரம் ,,

திரு எஸ். ஆறுமுகம் ,,

திரு எம். கைலாயபிள்ளை ,,

செல்வி. பீ. தாமோதரம் ,,

**குறிப்பு:**

திருவாளர்கள் கே. தங்கத்துரை அவர்களும், வேலுப்பிள்ளை அவர்களும் முறையே கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கும், நல்லூர் ஆசிரிய கலாசாலைக்கும் மாறிப் போயுள்ளார்கள். பதிலாகத் திருவாளர்கள் கோ. கோணேசபிள்ளை அவர்களும் கே. சிவானந்தநாயகம் அவர்களும் கண்டி முஸ்லிம் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலிருந்து இங்கு மாறி வந்திருக்கிறார்கள். திரு இராமச்சந்திரன் அவர்கள் பகுதிநேர விரிவுரையாளராகக் கடமை புரிகின்றார்.

**மற்றும்:**

திரு எஸ். எஸ். இராசதுரை, அவர்கள்.
(ஆண்கள் விடுதித் தலைவர்)

திருமதி எஸ். பரமானந்தன், அவர்கள்.
(பெண்கள் விடுதித் தலைவி)

திரு இ. இராமச்சந்திரன், அவர்கள். (இலிகிதர்)

திரு ரீ. கணேஷரத்தினம், அவர்கள்.
(ஆய்வுகூடத் துணையாளர்)

திரு வி. சவரி, அவர்கள். (அஞ்சல் சேவகர்)

---

நோவொழிய விளைப்பகற்றி நுவலநின்ற முதுமை
நோய்மரண முறுதலிலாத் தேவர்நிலை பெறுதற்
காவனசெய் தானந்த நிறைவினையன் றளித்த
அணிமலர்ச்செஞ் சேவடியை யடைந்தவரைப் புரக்கும்
தேவதரு நிழலென்கோ தெள்ளமுத மென்கோ
சிவானந்த நிதிபொதிந்த செழும்பேழை யென்கோ
பாவமொன்றே நீரமைந்து பரிந்துவந்தேன் சிரத்திற்
படிந்ததிரு வடியிணையை யடைந்ததுமற் புதமே.

—சுவாமி விபுலாநந்தா

# மட்டக்களப்பு

(1) மட்டு நகர் மாண்பு நகர் எங்கள் வளநாடு
மாமாங்கப்பிள்ளையவர் மகிழ்ந்திருக்கும் நாடு
எட்டுத்திசை பரந்து எழில் விளங்கு (ம்) நாடு
ஏர் முனையில் பண் கொழிக்கும் ஏற்புடைய நாடு

(2) பால் நிலவில் மீன் துள்ளிப் பண்ணொலிக்கும் நாடு
பாவையர்கள் கொண்ட வரைப் பணிந்து வாழும் நாடு
வேல் பிடித்தோர் பரம்பரையின் வெற்றிமிகு நாடு
வீணர்களின் ஆட்சி கண்டு வீறுகொண்ட நாடு

(3) சோலைகளில் தேன் சொரியும் சொர்க்கம் எங்கள் நாடு
சுவை நிறைந்த செந்நெல் வயல் சூழ்ந்திலங்கு நாடு
சாலை எங்கும் கலைவிளங்கும் சோலை எங்கள் நாடு
சந்திரனின் குணமுடையோர் தழைத்தோங்கு நாடு

(4) ஏந்தல் விபுலாநந்தனை ஈன்ற திருநாடு
வேந்தர் மூவர் காத்த தமிழ் விளங்கும் எங்கள்நாடு
வாழும் பல கலைகளிங்கு வளர்க்கும் எங்கள்நாடு
வந்தவரை உவந்தேற்று வாழவைக்கும் நாடு

(5) பண்டைத்தமிழ் மரபு பரந்திலங்கும் எங்கள்நாடு
பாட்டிமார் போட்டிக்கவிப்பாட்டிசைக்கும் நாடு
எண்டிசையும் பலமதங்கள் இணங்கி வளர்நாடு
எம்முன்னோர் அடி தழுவி இலங்கும் எங்கள்நாடு

கா. சோமசுந்தரம்
2ம். வருடம்.

# "ஓ மேகமே"

## (பண்டிதர் ஆ. சபாபதி)

மார்கழி மாதத்து வளர்பிறை நாட்களில் ஒருநாள் வைகறைப் பொழுதில் பக்தி நிறைந்த புலவர் ஒருவர் திருவண்ணுமலையடி வாரத்தில் ஏதோ யோசனை செய்துகொண்டு இருந்தார். மலையிலே வானளாவியுயர்ந்த மரங்களின் மேல் பச்சை நிறக் கொடிகள் படர்ந்து பன்னிறப் பூக்களை இறைத்துக் கொண்டிருந்தன. பூக்களில் வண்டுக்கூட்டங்கள் ரீங்காரம் பாடிக்கொண்டு தேன் மடுக்க அங்கு மிங்கும் பறந்து திரிந்தன. மாங்கிளைகளிலிருந்து பூங்குயில்கள் கூவின. கிளிகள் ஏதோ கதைகள் பேசின. மற்றும் பறவைகள் தங்கள் சிறகுகளையடித்துத் தம் இனத்தாருடன் அங்கு மிங்கும் தாவிப் பறந்துகொண்டிருந்தன. மலையுச்சியில் உள்ள கோவிலின் வெளிச்சங்கள் மின் மினிக் கூட்டங்கள் போலக் காட்சியளித்தன மலையடிவாரத்திலே ஒரு நன்னீர்ப் பொய்கையிருந்தது. அத்தடாகம் நிறையக் குவளையும் ஆம்பலும், குமுதமும் தாமரையும் பூத்து நிரம்பியிருந்ததினுல் அதன் மேற் பரப்பு பன்னிற மணிகள் பதித்துப் பச்சைக் கம்பளம் விரித்தது போற் காட்சியளித்தது.

வைகறைப் போதிலே நீராடி இறைவனை வணங்க எண்ணி வந்த புலவர் இயற்கையெழிலில் ஈடுபட்டு இயற்கையிலேயே இறைவனைக்கண்டு தன்னை மறந்து ஆழ்ந்த யோசனையிலிருந்தார். அவருடைய புலன்களைத் தூரத்திலே யாரோ, பேசிக் கொள்ளுகின்ற குழலும், யாழும், கலந்தும் விட்டும் இசைப்பதுபோன்ற ஒலிகள் நிலை குலையப் பண்ணின. வைகறைப் பொழுதிலே யாரென அவர்களை அடையாளம் கண்டு பிடிக்க அவரால் முடியவில்லை. ஆனுலும், அவர்களுடைய பேச்சிலும் தொனியிலுமிருந்து தடாகத்தை நோக்கி வருகிறவர்கள், கட்டிளங் கன்னிகையர் என்பதை மாத்திரம் அவர் உணர்ந்து கொண்டார். அதனுல், சற்று விலகி ஒரு புதரடியில் ஒதுங்கி நின்று அவர்கள் நீராடி வெளியேறிய பின்னர் தாம் நீராட வேண்டும் என்று தீர்மானித்தார். அவர்கள் பல பல பேசினுர்கள் அவற்றையெல்லாம் புலவர் தம்முடைய குறிப்புப் புத்தகத்தில் குறித்துக்கொண்டார். அப்பேச்சு முழுவதையும் எழுத இக்கட்டுரை இடம் தராதாதலின் சிலவற்றை மாத்திரம் சுருக்கி இங்கே எழுதுகிறேம்.

**ஒருத்தி:** அடி தோழி நாங்கள் இறைவன் வாழ்த்துப் பாடி உன் கத வண்டை வந்தோம். நீயோ மஞ்சத்தில் உறக்கமாகவிருந்தாய் உன் காதோ காது இதுதானு உன்பழக்கம்.

**வேருெருத்தி:** நீ சொல்வது சரிதான். என்னைப்போல் இறை வணக்கமுடையாரில்லை என்று வாயாற் சொல்லு வாய். ஆனுல், பஞ்சணை மெத்தைதான் உனது அன்பன்.

**மற்றவள்:** வாயால் மாத்திரம் தித்திக்கப் பேசுவாய். நித்திரை விட்டெழும்பவோ உன்னுல் முடியாது. உன்னுடைய அன்புதான் அன்பு வாய்ப் பேச்சு.

**இன்னுெருத்தி:** இவளைப் பார்: நாங்கள் அழைக்க இவள் மற்றவர் கள் எல்லாரும் வந்துவிட்டார்களோ என்று கேட்டு விட்டு உறங்கப் போனுளே.

**அடுத்தவள்:** இவள் நேற்றுதானே முதலில் எழும்பி வந்து பின்பு எங்களை எழுப்புவேன் என்று புழுகினுள். ஆனுல், விடிந்ததும் இவளால் எழும்பவே முடியவில்லை - ஏமாற்றுக்காரி இவள்தான்.

**பிறிதொருத்தி:** கோழி கூவிற்று, நாரை கூவிற்று, சங்கு முழங்கிற்று இவளுடைய காதில் அவை புகவில்லை. வாயால் மட்டும் பேசுவாள்.

இவை போன்ற பலவற்றைப் பேசிக்கொண்டு குளக்கரைக்கு வந்த வர்கள் ஒருவரை யொருவர் அணைத்துக்கொண்டு குளத்தில் இறங் கினர். பொழுதும் புலர்ந்துகொண்டிருந்தது.

அக்கன்னியர் நீராடுவதையும் புலவர் கவனிக்காமலில்லை. அவர்கள் குளத்தில் ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு இறங்கி இரு கைக ளாலும் நீரின்மேற் படர்ந்து பூத்துக் குலுங்கிய பச்சை நிறப் பைம் பூங்கொடிகளை ஒதுக்கினர். நீருட் புதைந்து புதைந்து எழும்பினர். அவர்களுடைய காதுகளில் மரக்குழைகள் அசைந்து தொங்கிக்கொண்டிருந்தன கைகளிலும், கழுத்திலும், மார்பி லும் உள்ள வைர நகைகள் அங்கு மிங்கும் அசைந்துகொண்டி ருந்தன நீண்ட கரிய கூந்தலில் அவர்கள் அணிந்திருந்த மாலை கள் கட்டவிழ்ந்து தொங்கி ஊசலாடின. பூக்களில் தேனுண்ணு வதற்கென்று வைகறைப் போதில் குளத்திற்கு வந்த தேனீக்

கூட்டங்கள் இவர்களுடைய முகங்களுக்கும் பூக்களுக்கும் வேறு பாடு தெரியவியலாது, அவர்களுடைய முகங்களும் கண்களும் அதரங்களும் பூக்களே என எண்ணி அவர்களைச் சுற்றிச் சுற்றித் திரிந்துகொண்டிருந்தன. அவர்களோ இவற்றைக் கவனியாது நீர் குடைந்து ஆடினார்கள். அவர்களுடைய மனத்தின் மகிழ்வுக்கு அளவில்லை. மகிழ்ச்சி இருந்தால் இசையும், பாட்டும் இயல்பாகவே எழுமன்றோ. அதனால் அவர்கள் சிற்றம்பலத்துத் தேவ தேவனைப் பாடினார்கள். வேதங்களில் உள்ள தெய்வப் பொருளைப் பாடினார்கள் சிவபெருமானுடைய சோதி வடிவத்தைப் பாடினார்கள். அவர் சூடியிருக்கும் கொன்றை மாலையின் அழகைப் பாடினார்கள். உலகின் முதலும் ஈறுமாயுள்ள பெருமான் கருணையைப் பாடினார்கள். அதனோடு நில்லாது உலகைப் பெற்று வளர்த்து வரும் தனிப் பெருந்தாயாகிய அம்மையாருடைய பாதகமலங்களைப் பாடினார்கள்.

புலவர் தன் குறிப்புப் புத்தகத்தில் இவ்வளவையும் குறித்துக் கொண்டார். அதில் உள்ள சொல்லழகும் பொருளழகும் என்றும் அழியாதவை. புலவர் குறித்து நமக்கு வைத்த வரிகள் வருமாறு:

காதார் குழையாட பைம்பூண்கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடக்
சீதப்புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மா பாடிச்
சோதித்திறம் பாடிச் சூழ்கொன்றைத்தார் பாடி
ஆதித்திறம் பாடி அந்தமா மா பாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன்
பாதத்திறம் பாடி ஆடு ஏல் ஓர் எம்பாவாய்.

இக்குறிப்பிலே புலவர் இவ்விதமாக நீங்கள் தினமும் நீராட வேண்டுமென்ற தமது எண்ணத்தையும், வெளிப்படுத்திவிட்டார். இக்கன்னியர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டு அவர்கள் எப்போ கரையேறுவார்கள் என்று காத்துக்கொண்டு இருந்த புலவர் வட திசையை நோக்கினார் மந்தமாருதம் மகரந்தங் கலந்து உடலுக்கு உற்சாகத்தையும் மனதிற்கு இன்பத்தையும் அள்ளியிறைத்துக் கொண்டிருந்தது. புலவர் அண்ணாந்து வானத்தைப் பார்த்தார். வாடைக்காற்றுடன் வாதுக்கு ஓடுவனபோல மேகங்களும் தென் திசையை நோக்கி விரைந்து கொண்டிருந்தன. அவை வெண்ணிற

முடையனவாய் இருப்பதைக் கண்ட புலவருடைய மனதிலே சற்றுச் சலிப்பு உண்டாயிற்று. இந்த மேகம் வெண்மையாயிருக்கிறதே, அதனால் இது மழை பெய்யாது. மழை பெய்யாவிடில் இந்தக் குளத்திலே நீர் குறைந்து போமே. இறைவனுக்குச் சாத்துவதற்கும் சூடுவதற்கும் பூ இல்லாமற் போய்விடுமே. அன்றியும் என்னைப்போல் வாரும், இக்கன்னிகையரைப் போல் வாரும், நீராடி மகிழ்வதற்கும் நீர் இல்லாமற் போய்விடுமே'' இவ்வாறெல்லாம் மனதிலே கற்பனை பண்ணிய புலவர் தன்னையும் மறந்து ''ஓ மேகமே'' என்று அழைத்தார். மேகமும் அவருடைய சொல்லைக் கேட்டது போலும் தன் வேகத்தைக் குறைத்தது. அந்த மேகத்தை நோக்கிய புலவர் பின்வருமாறு கூறுகிறார்:

வெண்ணிற மேகமே சற்றுத் தரிக்கமாட்டாயா? நான் சொல்வதைக் கேட்ட பின்பு நீ செல்லலாம். கருமை நிறமான மேகமாய் நீ இருந்தாலன்றோ உன்னாற் பயன் உண்டு. அப்போதான் நீ மழை பெய்வாய். கருநிறமாயிருப்பின் உன் அழகு குறைந்து போகுமென்று நீ எண்ணுகிறாய் போலும். அப்படி எண்ண வேண்டா. நீ இப்போதே கடலுக்குப் போக வேண்டும். அங்குள்ள நீரில் இயன்றமட்டும் குடிப்பாயாக. அப்போ உனது நிறத்தைப்பார். எம்பிராட்டியாராகிய உமா தேவியாரையும் பார். அவருடைய நிறமும் கருமைதான். அந்நிறத்தைப் பெற நீ பெருந் தவமெல்லாம் செய்திருக்க வேண்டும். நீயோ கடல் நீரைப் பருகினால் அந்நிறத்தைப் பெற்றுக்கொள்வாய். தஅன்பின்பு இங்கே விரைவில் வா. வரும்போது சும்மா வராதே. மின்ன வேண்டும். மின்னினால் அம்மின்னலைப் பார்த்தவர்கள் தேவியாருடைய இடையை நினைப்பார்கள். மேலும், நீ உரத்து முழங்க வேண்டும். உனது முழக்கம் உமாதேவியாரின் காற்சிலம்போசை போல இருக்குமன்றோ. இன்னுஞ் சொல்கிறேன் கேள்; உன்மேல் இந்திரவில் (வானவில்) திகழவேண்டும். அவ்வில்லும் அன்னையுடைய அழகிய புருவம்போல் இருக்குமன்றோ. இவற்றையெல்லாம் ஊன்றி நினைத்துப்பார். எம் தேவியாரை என்றும் பிரியாத எம் இறைவன் அன்பர்க்கு அருள் மழைபொழிகிறான். அன்னையோ, விரும்பி விரும்பி எங்களுக்குக் கருணை மழைபொழிகிறாள். அதுபோல நீயும் கடலில் இருந்து கொணர்ந்த நீரை இம்மலைமேலும், குளத்தின்மேலும் பொழியவேண்டும். அப்பெரு மழையால் இம்மலையில் உள்ள

பூங்கொடிகளும், செடிகளும் செழித்து வளரவேண்டும். இத் தடாகம் நீர் நிறையவேண்டும். ஆங்குள்ள நீர்ப்பூக்கள் மலர வேண்டும். கன்னிகையரும், காளையரும், இல்லறத்தோரும், என்னைப் போன்ற துறவறத்தோரும் புலரிப் போதில் நீராடி அண்ணுமலையண்ணலேயும் தேவியையும் அடிபணியவேண்டும். நாடு வளஞ் சுரக்க வேண்டும். நல்லரசு நிலைபெறவேண்டும்.

பாவையர் நீராடுதலைப் பற்றிய இருபது தேனினுமினிய பாடல்களைப்பாடிய புலவர் அவற்றிலே இறைவன் திருவருளே உலகில் முதன்மையானது என்றும், அத்திருவருளை பக்தி நிறைந்து அவளைப் பணிவதனுற் பெறலாம் என்றும் கூறு கிறுர்.

அவர் மழைக்கு விடுத்த வேண்டுகோள் வருமாறு:

முன்னிக் கடலைச்சுருக்கி எழுந்து உடையாள்
என்னத்திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ்சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந் தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவில்லா எம் கோமான் அன்பர்க்கும்
முன்னி அவள் நமக்கும் முன்சுரக்கும் இன்னருளே
என்னப்பொழியாய் மழை ஏலோ ரெம்பாவாய்.

## பிறகுறிப்புகள்:

மணிவாசகப்பெருமானுடைய திருக்கோவையார், படிக் கிறவர்களுடைய மனநிலைக்கேற்ற விதமாகப் பொருள் விரிந்து இன்பமூட்டுவது. திருவாசகமோ பக்திச்சுவை நிரம்பியது. அப் பக்திச் சுவையுடன் கலந்து மற்றச் சுவைகளும் உள்ள பாடல்கள் பலவற்றை ஆங்கே காணலாம் மாணிக்க வாசகர் பாடிய பாடல்களில் நிரம்பிய கவிநலன் உண்டு. அவர் பக்தி மான் என்று கூறுவதிலும் பக்தி நிறைந்த ஆசுகவி என்று கூறுவதே சால்புடைத்து. நம்மவர்கள் அவர் எழுதிய இரு நூற்களையும் படித்தால் இறைவன் திருவடியை மறவார்கள் என்பதும் தமிழ்மொழியின் கவிநலனை உணர்வார்கள் என்ப தும் திண்ணம்.

★

# ★ நாட்டுப் பற்றும் – – –
# – – – நமது மக்களும் ★

பெற்றதாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவவானிலும் நனி சிறந்தனவே.

என்பது நம் பாரதி கண்ட முடிவு. மரத்திற்கு வேர் எப்படியோ அப்படியே அரசுக்கு நாடும். நாடின்றி அரசில்லை, மக்களில்லை. மக்களின் நல்வாழ்விற்கு நாடுதான் காரணம் நாடு எவ்வாறு மனிதர்களுக்கு இன்றியமையாத சாதன மாக இருக்கிறதோ, அதேபோல் தான் ஒருநாடு முன்னேறுவதற்கு அந் நாட்டி லுள்ள எல்லா மக்களுக்கும் நாட்டுப் பற்று இன்றியமையாததாகும். ''மனிதர் கள்தாம் இராட்சியமே தவிர அவர்கள் இல்லாத கட்டிடங்களோ, கப்பல்களோ இராச்சியமாகாது.'' என்பது ஒரு கிரேக்க அறிஞர் வாக்கு. ஆகையால் ஒருநாடு முன்னேற அந் நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் ஐக்கியமாக நாட்டுப் பற்று கடமையுணர்ச்சி உள்ளவர்களாக வும், முன்னேற்றம் கருதி உழைப்பவர் களாகவும் வாழவேண்டும்.

நமது நாடு இன்று சுதந்திரம் பெற்றுப் பல வருடங்களாகியும் நமது நாட்டு முன்னேற்றம் கருதி நாமே உழைக்க வேண்டும் என்ற உணர்ச்சி நம்முள் பல ருக்கு ஏற்படவில்லை. இராமன் ஆண்டா லென்ன, இராவணன் ஆண்டாலென்ன, அல்லது கூடவந்த குரங்கு ஆண்டா லென்ன, நாமுண்டு, நமது வயிற்றுப் பாடுண்டு என்ற மனப்பான்மையுடன் வாழும் மக்கள் தொகை நம் நாட்டில் குறைந்த பாடில்லை சில அரசியற் தலை வர்கள் கூட நாட்டின் முன்னேற்றத் தைக் கருதாமல், பொது மக்களின் ஐக்கியத்தைக் குலைத்து வகுப்பு வாதப் பூசல்களை ஏற்படுத்துகின்றனர்கள். மக்கள் ''இலங்கையர்'' என்ற மனப்பான்மை யின்றி சிங்களவர், தமிழர் என்று வகுப்பு வாதப் போர் புரிகின்றனர். நமது நாடு முன்னேற நாட்டு மக்களிடையே பூரண ஐக்கியம் அவசியம். நமது நாட்டின் சுதந் திரம் இந் நாட்டில் வாழும் சகல மக்க ளினதும் முன்னேற்றத்திற்கும் அவசியம். இலங்கையில் நிலவி வரும் அந்நிய பொரு ளாதாரப் பிடிப்பை அகற்றி எம்மை முன்னேற்றக் கூடிய, ஒரு முற்போக்குத் தேசிய அபிவிருத்தித் திட்டம் அவசியம். புதுப் புது திட்டங்கள் வகுத்து மக்கள் வாழ்வில் புத்தொளி பரப்பினுற் தான் மக்கள் உள்ளங்களில் நாட்டுப் பற்றும், புதிய உற்சாகமும் ஊக்கமும் உண்டா கும். அத்துடன் நம் நாட்டை எதிர் நோக்கும் வறுமை, வேலையில்லாத் திண் டாட்டம் நோய்கள், குற்றங்கள் முதலி யன மறையும்.

உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேராதியல் வது நாடு.

உண்மையான நாடு எவ்வாறு அமைய வேண்டுமெனக் கூறினர் வள்ளுவப் பெருந்தகை. ஒருநாட்டில் வாழும்

மக்கள் ''தக்காரும் தாழ்விலாச் செல்வருமாய்'' இருக்க வேண்டு மென்றார்.

**தள்ளா விளையுளுந் தக்காரும் தாழ் விலாச்**

**செல்வரும் சேர்வது நாடு. (குறள்)**

குறைவு படாத உணவை விளைவிக்கும் உழவர்கள், தக்காரான அறவோர்கள், கேடிலாச் செல்வர்கள் வாழ்வதே நாடு. ஒரு நாட்டில் வாழும் செல்வர்கள் தங்களது செல்வத்தைப் பதுக்கிவைத்து நாட்டின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தி நாட்டில் கொடிய வறுமையை வளர்க்காமல்

**அற்றார் அழி பசி தீர்த்தல்**

**அஃதொருவன் பெற்றான் பொருள் வைப் புழி.**

என்ற வள்ளுவர் வாக்கிற் கிணங்கக் கிடைக்கும் அதிக இலாபத்தை அதைத் திரட்டத் துணைசெய்த தொழிலாளி வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு வாரி வழங்கவேண்டும். ஒரு சிலர் சகல வசதிகளையும் பெற்று வாழ, பலர் உயிர் வாழ்வதற்கு வேண்டிய உணவிற்காக நாள்தோறும் போராடிக் காலங் கழித்த வாறு வாழ்ந்தால் எவ்வாறு ஐக்கியம் ஏற்படும். நாட்டைப் பற்றிச் சிந்திக்க இவர்களுக்கு நேரந் தான் ஏற்படுமா? இதனாலன்றோ புரட்சிக் கவி பாரதியார்,

**தனி ஒருவனுக் குணவில்லையெனில்**

**ஜகத்தினை அழித்திடுவோம்** என்றார்.

இலங்கை போன்ற அடிமை நாட்டுப் பொருளாதார அமைப்புள்ள நாடுகளில் அரசாங்க உத்தியோகம் ஒன்று தான், தொழில் பெறும் வாய்ப்பு வசதிகளைத் தரவல்ல தென்பதால் சில தலைவர்கள் தமது மொழியை அரசாங்க மொழியாக மாற்றுவதன்மூலம் தமது மக்களிடம் நிலவி வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்த்து விடலாம் என்று வகுப்பு வாதத்தை ஏற்படுத்தினர். இன்று நாட்டின் ஒற்றுமையைக் குறைக்கும், மொழிப் பிரச்சினை காரணம் வேலையில்லாத் திண்டாட்டமேயாகும். ஏன்? ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற சிறந்த பண்புடன் வாழ்ந்த தமிழ் மக்களுக்குள் சிலர் இன்று பிரிவினைப் பேச்சுக்களைப் பேசுவதற்கும் பொருளாதாரமே காரணமாகும். ஆகையால் வறுமைக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் தீர்வு காணக்கூடிய வகையில் இலங்கைப் பொருளாதார அமைப்பை மாற்றியமைப்பதால், ஒருவித வேற்றுமைகளுமின்றி ''இலங்கை நாடு எங்கள் நாடு'' என்ற நாட்டுப் பற்றுடன் நாட்டின் நலன் கருதி ''நாடு வாழ நாம் வாழ்வோம்'' என்ற மறுமலர்ச்சியுடன் வாழ்வார்கள், ஒன்று பட்டு உழைப்பார்கள்.

மக்களிடம் நாட்டுப்பற்றை ஏற்படுத்த வேண்டுமெனில் அவர்களிடம் கல்வியறிவையும், அரசியல் அறிவையும் ஏற்படுத்த வேண்டும். ஒரு குடியரசு நாட்டில் கல்விக்காகச் செலவிடும் பணம் ஒரு நாளும் வீண் போகாது. கல்வி கற்றோரின் தொகை பெருகினால் அவர்கள் சமுதாயத்திலிருக்கும் தீங்குகளை வேருடன் களையப் பாடுபடுவார்கள். நாட்டுப்பற்றுடன் சகல துறைகளிலும் புதுப் புது நோக்கங்களுடன் வாழ்க்கையை நடாத்துவார்கள். சிறந்த தேசியக் கல்வியின் மூலம் நாட்டுப்பற்றை ஏற்படுத்தலாம். இன்று நடைமுறையிலிருக்கும் பாடத்திட்டம் முற்றாக மாற்றியமைக்கப்படல் வேண்டும். சாதாரண பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்துவோரில் 2 - 3 வீதத்தினரே மேற்படிப்

பிற்குச் செல்லுகின்றனர். ஏனையோர் ஆதரவற்றவர்களாய் வேலையற்ருேர் தொகையை அதிகரிக்கச் செய்கின்றனர்.

மாணவர்கள் கல்வி கற்கும் காலத்திலேயே தொழிற் பயிற்சி பெறக் கூடிய வகையில் ஒவ்வொரு கல்லூரியிலும், தொழிற் கூடங்களும், பண்ணைகளும் நிறுவப் படல் வேண்டும். பண்ணைகளும் தொழிற் கூடங்களும் செவ்வனே நடைபெற்ருல் அவற்ருல் வரும் ஊதியத்தின் ஒரு பகுதியைக் கலாசாலை நிர்வாகத்திற் காகச் செலவிடல் வேண்டும். இவ்வாறு செய்வதால் பாடசாலை நன்கு நடைபெறுவதற்குத் தங்களின் அயராத உழைப்பு அவசியம் என்று உற்சாகத்துடன் மாணவர்கள் உழைப்பார்கள். சிறு வயதிலேயே பிறருடைய நன்மைக்காக உழைக்கும் பழக்கத்தைப் பெறுவார்கள். பாடசாலைப் பொருட்களைத் தங்கள் சொந்தப் பொருட்கள் போல் பேணுவார்கள் பாடசாலை வேறு - நாங்கள் வேறு - அரசாங்கம் வேறு என்ற மனப்பான்மை நீங்கி மாணவர்களிடம் தேசிய மனப்பான்மையும், நாட்டுப் பற்றும் ஏற்படும். 1962ம் ஆண்டு தொடங்கப்பட்ட தேசிய சேவை சரியான வழியிற் செய்யப்பட்ட நல்ல தோற்றுவாயாக எல்லா ஆசிரியர்களும் உற்சாகத்துடன் சேவை செய்து மாணவர்களையும் சேவை செய்ய ஊக்குவது ஆசிரியர்களினது சாலச் சிறந்த கடமையாகும்.

நம்நாட்டு மக்கள் பிறநாட்டுப் பொருட்களில் கொண்டுள்ள மோகத்தை கைவிட்டு உள்நாட்டுப் பொருட்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். இதனுல் வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை முதலியன தீரும். இலங்கைப் பொருளாதாரம் இலங்கையிலேயே தங்கும். இதனை ஒவ்வொரு மனிதனும் உணரவேண்டும். தனி மனிதர் பலர் சேர்ந்துதான் சமுதாயம். ஆதலினுல் தனிமனிதன் நாட்டுப் பற்றுடன் சமுதாய முன்னேற்றத்திற்காகச் செய்கின்ற ஒவ்வொரு வேலையும் நாட்டையும் சமுதாயத்தையும் முன்னேற்றும். "நாம் தூங்கினுல் நாடு தூங்கும். நாம் உழைத்தால் நாடு விழிப்படையும்," என்ற உணர்ச்சியுடன் நாட்டுப்பற்றுடன் உழைத்து, நமக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்து மிஞ்சியவற்றைப் பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருவாயைப் பெருக்கும் நாள் எந் நாளோ? அந்நாளே பொன்னுள்.

வாழ்க! எங்கள் ஈழமணித்திருநாடு.

**சா. கணேசதாசன்**
2ம் வருடம்.

# ★ மெய்ப்பாடு ★

மெய் என்பது உடம்பு. பாடு என்பது மாற்றம். மெய்ப்பாடாவது உடல் நிலை மாற்றமாகும். உடல் நிலை மாற்றமடைய அநேக காரணங்களுண்டு. ஒருவனுடைய பரம்பரை, சூழ்நிலை காரணமாயும் உடல் நிலை மாற்றமடைகின்றது. மெய்ப்பாடு என்பது உணர்ச்சி, ஊக்கம், நடத்தை இவைகளின் மூலம் உடல் நிலையில் அவ்வப்போது ஏற்படும் நடத்தை மாற்றங்களாகும்.

## சூழ் நிலையும் மெய்ப்பாடும்:-

உயிர்வாழப் பல தேவைகள் உண்டு. இத்தேவைகள் சூழ் நிலையிலிருந்து நிறைவேற்றப்படுகின்றன. நிறைவேறு முன் பல தூண்டல்கள் மனிதனைத் தூண்டுகின்றன. இத்தூண்டல்கள் மனித உறுப்புக்களில் மோதி அவன் உணர்வைத் தூண்டுகின்றன. மனிதன் தூண்டப் பெறுவதை உணர்ந்தாலும், சிந்தித்து, அறிந்து கொள்வதில்லை. ஊக்கியும், விடாயுமே அறிவதற்கும் அறியாமைக்கும் காரணமாகும். சூழ்நிலையும், சந்தர்ப்பங்களுமே அச்சம், சினம், வியப்பு, உற்சாகம் ஆகிய மெய்ப்பாடுகள் தோன்றக் காரணமாகும். ஒரு சந்தோஷமான சூழலில் வசிப்பவன் எந்தக் காலமும் சந்தோஷமாக இருப்பினும் சில சில சந்தர்ப்பங்களே துக்கத்தையும், கவலையையும் ஏற்படுத்துகின்றன. சிறு குழந்தைகளைப் பொறுத்தளவில் தூண்டல்கள் வெகு குறைவாக இருப்பதாலே துலங்கலுக்கான நடத்தைகளும் குறைவாக இருக்கின்றன. உதாரணமாக திடீரென ஏற்படும் எல்லாத் தூண்டல்களும் சிறு குழந்தைகளுக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றன. குழந்தைகள் வளர வளர அவர்களை அதிகமான தூண்டல்கள் தூண்டுவதால் அதற்கேற்ப துலங்கல் நடத்தையில் அவர்களீடுபடுகின்றனர். சிறு பிள்ளைகள் மற்றப் பிள்ளைகளைப்பற்றி குறை கூறல், பழித்துக் கூறல் என்ற துலங்கல்கள், அவர்களைச் சில தூண்டல்கள் தூண்டுவதாலே நடைபெறுகின்றன. பாடசாலையில் பிள்ளைகள் அடிக்கடி சண்டையிடுவதும், பழித்துக் கூறுவதும், இழிவாகக் கூறுவதும் யாவும் இத்தூண்டல்கள் அவர்களைத் தூண்டுவதன் மூலமே துலங்கல்களாக வெளியில் நடைபெறுகின்றன. வளர்ந்தோருக்கு இத்தூண்டல்கள் பொறுமை என்ற துலங்கலை ஏற்படுத்துகின்றன.

## உணர்ச்சியும் மெய்ப்பாடும்:-

ஒருவன் கஷ்டமான சூழலில் இருக்கும் போது, அவனது உணர்ச்சிகள், சிந்தனைகள் யாவும் அவனது கஷ்டத்தைப் போக்கக் கூடிய வழிவகைகளைப் பற்றி ஆராய்ந்து அதற்கான துலங்கலைக் கண்டுபிடிப்பதிலேயே அமைந்திருக்கும் இந்த நிலைமையில் உள்ள ஒருவனுடன் தகாத வார்த்தைகளைப் பேசும்போது அவன் உணர்ச்சி வசப்படுகின்றான். அவ்வுணர்ச்சிதான் சினம் கொள்ளச் செய்கின்றது. சினம் என்ற துலங்கல் ஏற்படும் போது அவனது பார்வை, முகபாவனை யாவும் மாற்றமடைகின்றன. பின் அதை வெளியிடும் உச்ச நிலைதான்

பேச்சிலோ, நடத்தையிலோ ஈடுபடச் செய்கின்றது. சிறிது நேரத்தின்பின் கோபத்தைத் தூண்டும் நிகழ்ச்சி மறைய அவன் ஓரளவு அமைதியடைகின்ருன். அமைதியடையும் நிலைக்குப் பெயர்தான் உணர்ச்சியடங்கு நிலையாகும். இது போன்று வேறு சில உணர்ச்சிகளின் தூண்டப்பெற்று, அதற்கான துலங்கல் களிலீடுபடச் செய்கின்றன. உதாரண மாக ஒருவர் கூட்டத்தில் பேசிக்கொண் டிருக்கிருர். அவர் பேச்சின் போது இடை யிடையே அவரது முகபாவனையிலோ, அங்க அசைவுகளிலோ, அன்றி பேச்சிலோ தொனியிலோ மாற்றங்கள் ஏற்படுவதை அவதானிக்கலாம். இவ்விதமாற்றங்கள் அவர் உணர்ச்சி வசப்பட்டுப் பேசுகிருர். துக்கத்தோடு பேசுகிருர் அல்லது கவலை யுடன் பேசுகிருர் என்ற விபரங்களைத் தெரிவிக்கின்றன. இதிலிருந்து உணர்ச் சிக்கும் மெய்ப்பாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

## பேராசிரியர் 'வுண்ட்'டின் கருத்து:-

'வுண்ட்' என்ற உளநூல் பேராசிரியர் நேரம், அளவு, செறிவு இவைகளைக் கொண்டு உணர்ச்சி வசப்படுவதைப் பின் வரும் தாக்கங்களில் விளக்குகின்ருர்.

இன்பத்தாக்கம் — துன்பத்தாக்கம்
கிளர்ச்சி — மந்தம்
எதிர்பார்த்தல் — பூர்த்தியாதல்

மேற்கூறிய தாக்கங்கள் எல்லோர் வாழ்க்கையிலும் ஏற்படுவதுண்டு. குழந்தைகளை எடுத்துக்கொண்டால் தான் விரும்பிய பொருள் கிடைத்தால் மகிழ்ச்சி யடைகிறது. கிடைக்காவிட்டால் துன்ப மடைகின்றது. அத்தோடு துலங்கல் போருகிய அழுகையை மேற் கொள்கின் றது. வளர்ந்தோரும் தாங்கள் ஒன்றை எதிர்பார்த்து ஏதாவது ஒரு செயலி லிறங்கிஞல், எதிர்பார்த்தவை பூர்த்தி யடையாவிட்டால் துன்பமடைகின்றனர். அவை எந்த வழிகளில் பூர்த்தியாகும் என்றே சிந்திக்கின்றனர். அதற்கான நடத்தையிலீடுபடுகின்றனர். உதாரண மாக பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளை களை எடுத்துக்கொண்டால், அவர்கள் தாங்கள் ஆசிரியரிடம் நல்ல பெயர் பெற வேண்டும், எல்லாப்பாடங்களிலும் சரி பெற வேண்டும், சோதனை சித்தி பெற வேண்டும் என்ற சிந்தனைகளிலீடுபடுகின் றனர். அவர்கள் எதிர்பார்த்தவைகளில் பூர்த்தியடையாவிட்டால் மனமுறிவடை கின்றனர். மனமுறிவடைவதாலே அவர் கள் பல நடத்தைகளிலுமீடுபடுகின்றனர்.

## ஒத்துணர்ச்சியும் மெய்ப்பாடும்:-

ஒத்துணர்ச்சியென்பது இருவர்களினு ணர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு காரணமாக, இருவரும் ஒருவர் நடத்தை யில் மற்றவர் தன்னைப் பொருத்தி, அவர் ஈடுபடும் செயலில் தானும் ஈடுபடுவதே யாகும். உதாரணமாக சலனப் படம் பார்க்கச்சென்ற ஒருவன் படத்தில் நடிக் கும் கதாநாயகனுடன் தன்னைப் பொருத்தி, கதாநாயகனீடுபடும் ஒவ் வொரு செயலிலும் தானும் பங்குகொள் வதேயாகும். கதாநாயகன் துன்புற்ருல் தானும் துன்பமுறுகிருன், கதாநாயகன் இன்புற்ருல் தானும் இன்புறுகின்ருன். இந்தமாதிரியான நிலைமைக்குக் காரண மான உணர்ச்சியே ஒற்றுணர்ச்சியெனப் படும். பாடசாலையிலும், தொழில் நிலை யங்களில் வேலை செய்வோரிடமும், மற்று மிடங்களிலும் ஒற்றுணர்ச்சியின் காரண மாகவே பெரும்பாலும் சிநேகம் கொள் கின்றனர்.

மெய்ப்பாடும் கற்றலும்:-

மனிதனும், வேறு உயிரிகளும் சூழ் நிலையிலிருந்துதான் கல்வியைக் கற்கின் றன. உயிர்வாழ பல தேவைகளுண்டு. தேவைக்கும், அதை நிறைவேற்றுவதற் கும் பல விடாய்களும், ஊக்கிகளுமே காரணமாக இருக்கின்றன. உதாரண மாக உணவைத்தேடி உண்ண வேண்டும் என்ற தேவை உண்டு என்று கொள் வோம். பசி என்னும் விடாய் இல்லா விட்டால் உணவு இருப்பினும் உண்ண முடியாது. விடாயிருப்பினும் ஊக்கி யில்லாவிட்டால் உணவைத் தேடமுடி யாது. ஆகையால் தேவையைப் பூர்த்தி செய்வதில் விடாய்களும், ஊக்கிகளும் சரிபங்கு கொள்கின்றன. ஒருவனிடம் காணப்படும் மெய்ப்பாடுகள் பல ஆக்க நிலைநிறுத்த வழியிலும் அமைகின்றன. ஆனல் பெரும்பாலாரிடம் காணப்படும் மெய்ப்பாடுகள் கற்றலின் காரணமாகவே அமைவதாகக் கருதப்படுகின்றன சிறு குழந்தைகளை கொடிய பாம்பு, புலி, சிங் கம் போன்ற விலங்குகளிருக்குமிடத்தில் விட்டால் இவைகளைக் கண்டு அவர்கள் அஞ்சுவதில்லை. அவர்கள் இவைகளுடன் விளையாடவே எத்தனிக்கின்றனர். நாள டைவில் சூழலில், தாய், தகப்பன், சுற் றத்தவர்களின் மூலமே அவ்விலங்குகள் தீங்கு செய்பவை என்பதை குழந்தை உணர்ந்து, இவைகளைக் கண்டவுடன் பயப்படத் தொடங்குகின்றது. பயத்தின் மூலமே இவைகளைக் கண்டதும் உரத்துச் சத்தமிட்டு அழத்தொடங்குகின்றது. அழுகைதான் கற்றதை வெளிப்படுத்தும் மெய்ப்பாட்டுச் செயலாக அமைகின்றன. அழும் குழந்தைக்கு இனிப்புக்கள் கொடுத்தால் அழுகையை நிறுத்தி விடு கின்றது. இனிப்பு தேவை என்ற நிலை ஏற்பட்டால் அழத் தொடங்குகிறது. இதனல் குழந்தை கற்றுவிட்டது. அதற் கான செயலில் ஈடுபடுகிறது என்றுதா னர்த்தம் கொள்ளவேண்டும். இவ்விதமே விலங்குகளும் பழக்கப்பட்டபடி செய் கின்றன. அதன்மூலம் தங்கள் தேவை களைப் பூர்த்தி செய்கின்றன.

* * *

சி. வேலுப்பிள்ளை

முதலாம் ஆண்டு.

# கலை அரசி

கல்விக்குத்தெய்வம் கலையரசி—அவள்
காணும் பொருளிற் கலந்திருப்பாள்;
நல்லவர் நெஞ்சில் நடம்புரிவாள்—தமிழ்
நாவலர் சொல்லில் நயந் தருவாள்;
வெல்லம் நிகர்த்த மழலையிலே—அவள்
வீணை ஒலியில் நிறைந்திருப்பாள்.

கல்லில் வடித்த சிலைவடிவாய்—அங்கு
காணும் பொலிவுக் கலையுயிராய்;
சொல்லிற் பிழிந்த கவிச்சுவையாய்ப்—புகழ்
சூடும் இளமைத் தமிழுருவாய்;
எல்லை பரந்த குளிர் மதியாய்—வெளி
எங்கும் நிறைந்த கதிர்த் துகளாய்ச்
செல்வி யிருப்பாள் சிறு நகைப்பாள்—எந்தன்
சிந்தைக் கடலில் முகிழ்த்திருப்பாள்.

சூழும் இயற்கை எழிலிடையே—மலை
சுற்றித் தவழும் நதியிடையே
நாளும் பொழுதும் நமதருகே—உயிர்
நாடித்துடிப்பில் நனைந்திருப்பாள்;
வாழும் நெறிகள் வகுத்தவரின்—மன
வாசற் றிருவாய் மலர்ந்திருப்பாள்
ஆளும் தலைவி அருமருந்தாய்க்—கல்வி
ஆரம் கழுத்தில் அணிந்திருப்பாள்.

நாற்றம் அகன்ற உலகினிலே—தொழில்
நாளும் அலைந்த கரத்தினிலே
ஏற்றம் படைத்த நினைவினிலே—தொழில்
ஏழைமை காய்ந்த நிறைவினிலே
ஊற்றாய் அவளும் உலவிடுவாள்—சிறு
ஓய்வில் அமையா(து) ஒளிதருவாள்
போற்று(து) இருப்பின் மனிதரிலை—வெறும்
புண்ணே நமது புலாலுடம்பு.

வீட்டில் இருப்பாள் சிறுவருடன்—பல
வித்தைக் கருவாய் அமைந்திடுவாள்
நாட்டில் இருப்பாள் நிறையரசாய்—அங்கு
நஞ்சு கலப்போர்க்(கு) நரகளிப்பாள்;
ஏட்டில் இருப்பாள் கருப்பொருளாய்ச்—சிந்தை
எண்ணத்(து) உறைவாள் எழிலுருவாய்;
பாட்டில் இசையில் பல பொருளாய்—நிற்கும்
பங்கயப் பாதம் பணிந்திடுவோம்.

கு. கணபதிப்பிள்ளை
2ம் வருடம்.

# முடிந்த கதை

அலைபுரள் கடற்கரை. அழகு நிரை சூழ் நிலை. அந்திவானத்தின் பல் நிறக் கோலங்கள். பரவசமூட்டும் சுவைமிக்க காட்சி. மெல்லென எழுந்த வெண்மதியின் பிரகாசத்தால் செந்நிறவானம் புதுக் கோலம் பூணத்தொடங்கியது. வெள்ளியோடத்தின் தண்ணொளிக்காற்ருது மின்சாரவிளக்குகள் மின்மினிகளாகின.

அன்று பௌர்ணமி, சில்லென்ற குளிர் காற்று உடலுக்கிதமாக இருந்தது. கூடியிருந்த அனைவரும் அகலத் தொடங்கினர். ஆயினும், முகுந்தனும் அழகனும் வெள்ளித்தட்டிடைபதித்த இரு மாற்றுருவங்களாகக் காட்சியளித்தனர். முகுந்தன் தனிமையும் இனிமையும் கலந்த ஒரு ஏகாந்த உலகத்திலே இறக்கை கட்டிப் பறந்தவண்ணமிருந்தான். எவ்வகைப் பட்ட இளநினைவுகள் அவனை இழுத்துச் செல்கின்ற தென்று அறியமுடியாது. அதையறியும் ஆவலோடு முகுந்தனைக் கூர்ந்து பார்த்தான் அழகன். முகுந்தன் முகத்திடை ஒரு மங்கலான தெளிவும், அர்த்தம் காணமுடியாத புன்முறுவலும் இதழிடைதோன்றி மறைந்தது, அதைத் தொடர்ந்து ஒரு பெருமூச்சும் எழுந்தது.

''முகுந்! நான் உன்னிடம் ஒன்று கேட்க ஆசைப்படுகிறேன். நீ மனப்பூர்வமாகச் சொல்ல விரும்பினுல்'' ... என அவனை உற்றுப்பார்த்தபடியே இழுத்தான் அழகன். வரண்டசிரிப்புடன் ''என்ன அழகு நீ சந்தேகப்படும்படி நானென்ன இரகசியத்தை வைத்திருக்கப் போகிறேன்'' என மழுப்பினுன் முகுந்தன்.

''என்னிடம் எதையும் மறைக்கமாட்டாய் என்று எனக்குத் தெரியும். முகுந்! இருந்தாலும், கொஞ்சக்காலமாக உன்னைக் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். முன்போல் உன்பகிடிப்பேச்சும், முகப் பொலிவும் இப்போது கிடைப்பது மிக அரிதாகிக் கொண்டுவருகிறது. இருந்தாற் போலிருந்து எதைப்பற்றியோ சிந்திக்க ஆரம்பித்து விடுகிருய். எதையோ அடைந்துவிட்டாற் போன்ற மகிழ்வும், அதேநேரத்தில் அதை இழந்து விட்டாற் போல் உன் உள்ளத்தேயிருந்து பெருமூச்சுகளும் எழுகின்றன. மனக் குதுகூலத்தையும், குலேவையும் சணத்திற்குச்சணம் மாறி மாறி அனுபவிக்கிருய்'' என நிறுத்தினுன் அழகு.

''இன்பமும் துன்பமும் சுழலும் சக்கரம் தானே அழகு இருந்தாலும் உன் உள்மனம் நினைப்பதுபோல நான் என்னுள் ஒன்றை ஒழித்துவைத்துக் கொண்டு வேதனைப்படுவது உண்மைதான்''

''அதை நீ மட்டும் மனதில் வைத்திருப்பதால் வேதனை கூடுமேயொழிய, குறையாதப்பா. உனக்கு விருப்பமிருந்தால் சொல். என்னுல் எதுவும் உதவி செய்ய இயலுமாவென்று பார்க்கிறேன்.''

''இப்போது யாருமே உதவி செய்ய முடியாத நிலையப்பா. காலம் கடந்து விட்டது. இருந்தும், என்னுல் புரிந்து கொள்ளமுடியவில்லை அழகு. என்னுடன் ஆபீஸில் வேலைசெய்யும் டைபிஸ்ட் சித்ராவைப்பற்றி உனக்குத் தெரியுமே அவளைப்பற்றி நீ என்ன நினைக்கிருய்?''

எனக்கேள்வியோடு நிறுத்திஞன் முகுந்தன்.

''கட்டான உடலுடையவள்! அடக்கமானவள் வேறென்னப்பா நினைக்கமுடியும்'' அமைதியாகப் பதிலளித்தான் அழகு.

ஏக்கம் கலந்த ஒரு சிரிப்புடன் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான் முகுந்தன். ''அழகு அவளை ஆரம்பத்தில் சந்தித்தபோது நான் எதுவுமே நினைக்க வில்லை. இப்படியொரு நிலை ஏற்படுமென்று கனவிலும் எதிர்பார்க்க வில்லை. ஆஞல் இருந்தாற் போலிருந்து அவள் என்னை அடிக்கடி கவனிப்பதாக எனக் கொரு பிரமை ஏற்பட்டது. அதஞல் என்மனமும் ஈர்க்கப்பட்டு நானும் கவனியாதது போல் கவனிக்கத் தொடங்கினேன். அவள் உண்மையாகவே என்மேல் அக்கறை செலுத்துவதை என்ஞல் உணர முடிந்தது. 'கண்ணெடு கண்ணினை நோக்கின் வாய்ச் சொல் எவ்வித பயனுமில' என்பதுக் கிணங்க பார்வைக்குப் பார்வை விருந்தாகப் பல நாட்கள் தொடர்ந்துகிடைத்துக் கொண்டிருந்தது. காதலரும்பு என் இதயத்தே மலரத் தொடங்கியது இனம் புரியாத ஒரு ஏக்கமும் குடிகொண்டது. எனது பிற்கால வாழ்க்கைக்குப் பொருத்தமானவளா? என எடை போட்டு ஆம்! என்ற விடையையும் பெற்றேன். அவளோடு தொடர்பு கொண்டு பேச வேண்டு மென்றும் அவளது மனத்தை அவள்மூலம் அறிய வேண்டுமென்றும் விரும்பினேன். கன்னியர்கள் ஒரு கடைக் கண் வீச்சிஞல் தங்கள் கருத்தைத் தெரிவித்து விடுவார்கள். ஆஞல், காளையரோ ஆயிர மாயிரம் சொற்களைத் தேடித் திரிய வேண்டுமென்ற உண்மையை உணர்ந்து கொண்டேன் அவளுக்கும் பேச ஆவலுள்ளதை அவளது ஏக்கம் கலந்த பார்வையிலிருந்து அறிய முடிந்தது. ஆயினும், அத்தனை ஆண்கள் மத்தியிலும் அவளது பெண்மை அதற்கு இடம் கொடுக்காதென என்னையே நான் தேற்றிக்கொண்டேன். ஆஞல், எனக்கோ அவள் மனதை அறிந்துவிடவேண்டுமென்ற இன்பத்துடிப்பு நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வந்தது. உள்ளத்தே எழுந்த புது உற்சாகம், ஒருவித குறுகுறுப்பு, எனக்குப் பயங்கலந்த ஒரு துணிவை ஏற்படுத்தியது. தோகையுடன் பேசவேண்டுமென்ற துடிப்பு ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்தது.

அன்று எங்கள் ஆபீஸிலிருந்து மாற்றலாகிச் செல்லும் உதவி மனேஜருக்கு பிரிவுபசார விருந்து நடந்துகொண்டிருந்தது. அதை நடத்தும் பொறுப்பு எனக்கே அளிக்கப்பட்டது. சித்திரா தின் பண்டங்களைப் பரிமாறிக்கொண்டிருந்தாள். தின் பண்டங்கள் வைக்கப்பட்டிருக்கும் அறையில் நான் சோடாப் போத்தலைத் திறப்பதற்காக ரின் கட்டரைத் தேடிக்கொண்டிருக்கும்போது சித்திரா உள்ளே வந்தாள். என்னைக் கண்டதும் ஓடிவிட ஆயத்தமாஞள். அப்போது நான் 'சித்திரா' என அழைத்து நிறுத்தினேன். நின்ருள். அருகில் வருமாறு அழைத்தேன். காந்தத்தால் இழுக்கப்பட்ட இரும்பைப் போல அசைந்தாடி என்னருகே வந்தாள். வந்து விட்டாளேயொழிய எதுவும் பேசவில்லை. மீண்டும் ''சித்திரா'' என்றேன்.

''உம்'' என்றவள் பரக்கப்பரக்க, பல பக்கமும் பார்த்துக் கொண்டாள், கால்கள் நிலைகொள்ளாமல் சீமெந்துத்தரையிலே பல சித்திரங்களை வரைந்துகொண்டிருந்தன. இந்த நிலை எனக்கோ மிஞ்சிவிட்டது. நெஞ்சுத் துடிப்பும், பயமும், குழறுபடியாக உருவாகும் சொற்களும்

என்னைக் குழப்பின. ஏன் அவளை அழைத்தோம் என்றாகிவிட்டது. அவளுக்கு வேர்க்க வேறு ஆரம்பித்துவிட்டது. மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு சில அர்த்தமற்ற விஷயங்களைப் பற்றிப் பேசினேன். அவளோ அவ்விடத்தை விட்டு அகல ஆத்திரப் பட்டாள். ஆனால், போகவும் முடியாமல் தவித்தாள். இதையுணர்ந்து நான், ''சித்திரா உன்னை நான் உன்னை'' எனத்தடுமாறி ''மீண்டும் சந்திக்க விரும்புகிறேன். வருகிறாயா?'' என்று ஒருவாறு முடித்தேன். அவள், ''சரி'' என்று தலையாட்டினாள். அவ்வளவுதான் நடந்தது. அவ்விடத்தைவிட்டு இருவரும் அகன்று விட்டோம்.

அடுத்த நாள் அவளைப்பார்ப்பதற்கு எனக்குச் சங்கோஷமாயிருந்தது. அவளுக்கும் அப்படித்தானிருந்திருக்கும். ஏனென்றால், அன்று இருவரும் ஒருவரை ஒருவர் சந்தியாமலிருக்கும் நிலையை ஏற்படுத்திக் கொண்டோம். நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன. பேச்சுத் தொடரவில்லை. 'பழைய குருடி கதவைத் திறடி' மாதிரி கண்களின் தொடர்பே நிகழ்ந்துகொண்டிருந்தது. அவளும் பேசுவதாகக் காணோம். நானும் பேசுவதாக இல்லை. எனக்கு ஒரு இனம் தெரியாத தவிப்பாக இருந்தது. அவளுக்கு எப்படி இருந்ததோ?

ஒருநாள் எனது மனத்துள் நடந்த போராட்டத்தின் முடிவாக அவளுக்கு என் நிலையை விளக்கி, அவள் விருப்பைக் கேட்டு ஒரு கடிதம் எழுதினேன். எழுதினேனே தவிர இரு நாட்களாக அக் கடிதத்தைக் கொடுக்கவில்லை.

அடுத்த நாள் அவள் தனிமையில் 'டைப்' அடித்துக்கொண்டிருக்கும் நேரத்தில் அவள் மேசையில் வைத்து விட்டுத் திரும்பினேன். நிச்சயம் அவள் அந்தக் கடிதத்தை எடுத்துத்தான் இருக்கவேண்டும். கடிதத்தைச் சேர்த்தபின் இன்று வரும் நாளை வருமென அவள் பதிலுக்காகக் காத்துக் கிடந்தேன். காலம் கடந்தது. பதிலும் வரவில்லை. காரணமும் கிடைக்கவில்லை. என் மனம் தொடர்பைத் தளர்த்தத் தொடங்கியது. ஒருதலைக் காதலாயிருக்குமோவென ஐயுற்று என் காதல் நினைவுகளைக் கரைக்கத் தொடங்கினேன். அவளைப் பார்ப்பதையும் படிப்படியாக நிறுத்திக் கொண்டு வந்தேன் சந்திக்கக்கூடிய சந்தர்ப்பங்களைத் தடுத்துக்கொண்டேன். ஒரு மாதம் ஓடிவிட்டது ஒரு வாரமாக அவள் வேலைக்கு வரவில்லை.

ஒருநாள் அவளின் இராஜினாமாக் கடிதமும் அவளது திருமண அழைப்பிதழும் வந்திருந்தது. ஆபீஸிலுள்ள அனைவரும் திருமணத்திற்குச் சென்றிருந்தனர். அவர்களிடம் என் பரிசையும் கொடுத்துவிட்டு நான் நின்றுகொண்டேன்.

திருமணம் முடிந்து இரு வாரங்களுக்குப் பின் கோயிலுக்குச் சென்று வரும் வழியில் அவளையும், அவள் தம்பியையும் எதேச்சையாகச் சந்திக்க நேரிட்டது. என்னைக் கண்டதும் அவள் சற்றுத் தயங்கினாள். கண்கள் துடித்தன இதழ்கள் அசைந்தன. ஆனால், பேசவில்லை. கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் உதிர்ந்தன. நான் பார்த்தும் பார்க்காதவன் போல் வந்துவிட்டேன். இதுதான் கதை. இதன் பின்தான் என் சிந்தனை பலத்தது. அவள் என்னை விரும்பினாளா? விரும்பவில்லையா? திருமணம் முடிந்தபின்பு என்னைக்கண்டு அழுததன் காரணமென்ன? இக் கேள்விகளே என் மனத்தைக் குழப்பிக்கொண்

டிருக்கின்றன அழகு என நிறுத்திஞன் முகுந்தன்.

''அவள் உன்னை விரும்பியிருக்கலாம் முகுந். ஆனுல், தவிர்க்கமுடியாத ஒரு காரணத்துக்காகத் தன் காதலைத் தியாகம் செய்திருக்கிருள் என நினைக்கிறேன்'' என்று கூறிஞன் அழகன்.

''எதுவாயினும் என்னிடம் கூறியிருக்கலாமே அழகு'' ''முகுந் பெண்களின் மனதை அறிவது மிக மிகக் கஷ்டமடா. ஒரு பெண் வாய் திறந்து பேசினல் ஓரளவு அவளை அறிந்துவிட முடியும். மௌனம் சாதிக்கும் பெண்களை அறியவே முடியாதப்பா. இம்மாதிரிப் பெண்கள் தங்கள் வாழ்க்கையையே பாழாக்கிக் கொள்கிருர்கள்.''

"போனதெல்லாம் போகட்டும் முடிந்த கதை முடிந்த கதையாகவே இருக்கட்டும். அவள் நன்ருக வாழ்ந்தால் அதுவே போதும்'' என முகுந்தன் எழுந்தான். அவனைத் தொடர்ந்து அழகனும் எழுந்தான். முகுந்தனின் மனத்திடையிருந்த எண்ணங்கள் மறைந்து வெறுமையாகப் போனதுபோல கடற்கரையும் வெறுமையாகக் காட்சியளித்தது.

*(சிறு கதை)*

**இரா. கிருஷ்ணபிள்ளை**
*1ம் வருடம்.*

---

**சிறந்த இலக்கியம்**

ஒரு சிறந்த இலக்கியத்தை ஒருமுறை அல்லது இருமுறை படித்தால் மட்டும் போதாது. ஏன், பத்துமுறை நுகர்ந்தாலும் போதாது. அதோடு உன் வாழ்க்கை ஒன்றிப் போய்விடவேண்டும். ஒரு புத்தகக் குறிப்பை வகுத்துக்கொண்டு அதன் கண் நீ படிக்கின்ற நூலிலிருந்து உனக்கு எது மிகச் சிறந்ததாகப் படுகின்றதோ, எது உன் மனத்தைக் கவர்கின்றதோ, எது பற்பல கருத்துக்களைக் கவனிக்கும்படி செய்கின்றதோ - இவற்றை வரைவாயாக.

'கல்வித் துறையில் இலக்கியம் ஆற்றவேண்டிய பணி இதுதான்: மனத்தை மலரச் செய்வதும் அதைத் திருத்துவதும், அதை நுண்ணியதாகப் புரிவதும், பொருள்களை ஆராய்ந்து அவற்றை ஒருவன் குருதியில் கரையும் படி அதை ஒரு கருவியாக ஆக்குவதும் இலக்கியத்தின் தொழில்களாகும்' என்று கார்டினல் நியூமன் நவில்கின்ருர். மேலும், தன்னுடைய ஆற்றல்கள் மீதே மனம் ஆட்சி புரிவதற்குற்ற பாதையையும் இலக்கியம் காட்டுகின்றது. எந்த எந்த முறையில் ஆற்றல்களைச் செயல்படுத்த வேண்டும் என்றும், எந்தத் துறையிலும் மனம் எப்படி எப்படி வளைந்து கொடுக்க வேண்டும் என்றும் அது சுட்டுகின்றது. அறியவேண்டிய முறை, திறஞய்வில் கோடாமையில்லாமல் ஒரு திருத்தமான நெறி, சொல்வன்மை, சொற்பொழிவு ஆற்றவேண்டிய திறன்-இவற்றையும் இலக்கிய வாயிலாக நாம் உணர்கின்ருேம்.

—வைகவுண்ட் ஜான் மார்லி

# மனிதப் பிறப்பின் மாண்பு

இந்தச் சரீரம் நமக்குக்கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம். மனிதப்பிறவி கிடைப்பது அற்பமான பேறன்று. அது உயிர்களுக்கு இறைவன் அளிக்கும் அரிய நன்கொடை. மனிதப்பிறவி எடுத்தும் அனுபூதியாகிய ஆன்ம சுகம் பெற விரும்பாவிடில், அடையவேண்டியது எது வென அறிந்திருந்தும் அதைப் பெறுதற்கான வழியை அறியாவிடில் நாம் பூரண அனுக்கிரகம் பெற்றவர்களாக மாட்டோம்.

வாழ்க்கையின் முடிவான இலட்சியத்தை அடைவதற்கான பாதையிலுள்ள ஒரு தங்கும் இடமே இவ்வுலக மானிட வாழ்க்கை. இவ்வாழ்க்கை நிலையற்றது. ஏனெனில், பிறந்தவை அனைத்தும் இறந்து போவதைக் காண்கிறோம். இறந்தும் வாழ்க்கை முடிந்து விட்டதென்று கூற முடியாது. ஏனென்றால், அதன் பின்னும் வாழ்க்கை தொடர்ந்திராவிடில் இவ் வாழ்க்கையிலே புரியப்படும் செயல்களும் பெறப்படும் அனுபவங்களும் மதிப் பிழந்து வீணாகிப்போகும். வாழ்க்கை என்பது ஓர் நீண்ட சங்கிலித் தொடர். திரும்பத்திரும்ப வரும் பிறப்புகளும், உலக வாழ்க்கைகளும், இறப்புகளும் அதன் இணைப்பு வளையங்களாகும்.

ஆசைகளும் கர்மங்களும் பிறப்புக்குக் காரணமாகின்றன. பிறப்பே மேலும், மேலும் ஆசைகளுக்கும், கன்மங்களுக்கும் காரணமாகின்றது. எனவே முடிவில் பிறப்பும், இறப்பும் அற்ற உயர்ந்த வாழ்க்கைக்குத் தகுதி பெறுவதற்கான பயிற்சியை அடையவே இவ்வரிய மானிடப் பிறவி வாய்த்துள்ளது. இவ்வுலக வாழ்க்கை ஆன்மாவின் இலட்சியமோ முடிவோ ஆகாது. உலக வாழ்வே முடிவானதெனின் இங்கு எவருமே சாக மாட்டார்கள். மாறுதல்களோ, துன்பமோ, துக்கமோ இங்கிராது. குறை உணர்ச்சியோ, அல்லது இப்போதுள்ள நிலைக்கு மேலான நிலையையும், தகுதியையும் அடையவேண்டுமென்ற மன எழுச்சியோ எவருக்கும் ஏற்பட்டிராது. எனவே, மனிதப்பிறவியை வழி நடத்தும் மாறுதலற்ற அழிவற்ற பொருள் ஒன்றுள்ளது என்பதையே மாறுபட்டு வரும் இவ்வுலகம் நிரூபிக்கின்றது. நாங்கள் தன்னந்தனியாகவே இவ்வுலகுக்கு வந்தோம். துணையின்றித் தனியாகவே இவ் வுலகை விட்டுப்போய் விடுவோம். இப் பிறவியில் நாங்கள் செய்த நன்மையும் தீமையுமே அன்றி வேறேதும் எங்களுக்கு உதவப்போவதில்லை பெரிய பசுக் கூட்டத்தினூடே தத்தம் தாய்ப் பசுவைத் தொடரும் கன்றுகளைப்போல நாங்கள் செய்த நன்மையும், தீமையும் நம்மைத் தேடித் தொடர்ந்து வரும். நம் வாழ்க்கையே குறுகியது. கடக்கவேண்டிய தடைகளோ மிகப்பல எனவே, பொன்னான காலத்தை வீணாக்காது ஒவ்வொரு வினாடியையும் மிக உன்னதமான இலட்சியத்துக்காக நாம் பயன்படுத்த வேண்டும்.

மனிதன் உயிர் வாழ்ந்திருந்தால் மட்டும் போதாது யாண்டும் நலமிகப் பெற்

றுப் பெருமையுடன் வாழவேண்டும். எண்ணரிய பிறவிகளில் மானிடப்பிறவி தான் அரிதினும் அரிதென்று முன்னோர் கள் முரசறைந்தது வெறும் வீண் வார்த்தையல்ல. சீரிய சம்பந்தமாக அவர்கள் கண்டறிந்தபேருண்மையைப் புகட்டுதற் பொருட்டே அங்ஙனம் மொழிந்தனர். பரம்பொருளில் ஐக்கிய மாதல் உட்பட எத்தகைய உயர்நிலையை வேண்டுமானாலும் பெறுதற்கு மானிடப் பிறவி ஒன்றே உற்ற உபாயமாகும். மேலான பதவியை எய்த விரும்பும் தேவர்கள்கூட இவ்வுலகில் வந்து மானிட ராய்ப் பிறக்க வேண்டுமாம். கிடைப் பதற்கரிய இத்தகைய சந்தர்ப்பத்தைப் பாழ்படுத்துதல் மடமையன்றோ பேர றிவு, பேரின்பம் இவைபோன்ற மாண்பு களை நீத்து விட்டுத் துன்பம் நிறைந்த இவ்வாழ்வே அற்புதம் எனக் கொள்வது முறையன்று.

பிணியறியாப் பேராளர், எண்ணி யதை எண்ணியாங்கு எய்தவல்ல வீரர் நமனை அஞ்சாதவர். நரகத்தில் இடர்ப் படாதவர். இத்தகைய பெருமக்கள் நம் நாட்டிற் பிறந்தது வெறும் காரணமற்ற குருட்டு வாய்ப்பல்ல. கல்வியறிவிற் சிறந்தவர்கள் திகைத்திடும்படி ஞானம் பேசிய ஞான சம்மந்தர், நசிகேதர், சுக தேவர் முதலிய பல யோகிகள் தோன் றிய காலமும் இருந்தது. விலங்குக் கூட் டத்து வாழ்க்கையை விட மானிட வாழ்க்கை மிக மேலான தென்றறிந்த நம்முன்னோர்கள் அதை நான்கு ஆச்சிர மங்கள் அல்லது படித்தரங்களாகப் பகுத்தனர். இவை மனிதப் பிறப்பு மாண் புறுவதற்கும், மதிப்பிடற்கரிய அரிய வீடு பேறடைதற்கும், பிறவிப் பெருந் துன்பம் நீங்கி முத்தி இன்பம் பெறுதற்கும் உறு துணையாய் வழிகாட்டும். பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நி யாசம் என்பனவாகும். இவைகளுள் வாழ்க்கைக்கு அத்திவாரம் போன்றி ருப்பது பிரமச்சரியம். ஆயுள் முழுதுக் கும் அது உயிர் ஊட்டுகிறது.

இம்மைப்பயன், மறுமைப்பயன் ஆகிய இரண்டுக்கும் பிரமச்சரியம் ஆணிவேர் போன்றது. மாந்தர் அனைவருக்கும் இது மாண்பு அளிக்கவல்லது ஆண் பெண் இரு பாலாருக்கும் பொதுவானது. அடுத்த படியாகிய கிருகஸ்தத்தை மனிதன் அடைய முன்னுள்ள தன்னிளமைப் பரு வத்தில் உண்மையான பிரமச்சரியத்தை உரிய முறையில் காப்பாற்றாது விடின் தான் எடுத்த மானிடப் பிறவி பயனற்ற தாகி விடும்.

மனிதப் பிறவி எடுத்து மாண்புடன் திகழ்ந்த சமய குரவர்களும், சங்கராச் சாரிய சுவாமிகளும், இராமகிருஷ்ண பரமஹம்சரும் அன்னை சாரதா தேவி யாரும், சுவாமி விவேகானந்தரும் வாலி பப் பருவத்தில் பிரமச்சரியத்தை வளம் படுத்திக் கொண்டதால் வானவர்க்கும் கிட்டாத பார்சிமை பெற்றார்கள். வாலிபப் பருவம் என்பது இறைவனின் சோதனைக்குரிய காலமாகும். இக்கால எல்லையில் தான் வாலிபர்கள் கட்டுப் பாடுடனும், மனத் தைரியத்துடனும், பொறுமையுடனும் மாண்புற வாழவேண் டும். இயற்கை உணர்ச்சிகள் கட்டுக் கடங்காமல் மன எழுச்சிகளைத் தூண் டும் பருவத்தில் வாலிபர்களாகிய ஆண் களும், பெண்களும் மனதிலே அமைதியை நிலை நாட்டவேண்டும். அமைதியை நிலை நாட்டச் சிறந்த ஒரு வழி இறைவனின் திருவடிகளில் நாட்டங் கொள்வதே யாகும். செயற்கரிய செயல்களைச் செய் யக் கூடிய திடகாத்திரமும, மனத்துணி வும் இருக்கும் பருவத்தில் தீ நெறியிற்

செல்லும் மன ஊக்கத்தைத் தடுத்து அறவழியிற் செல்லப் பழகிக்கொள்வது, ஆன்ம ஈடேற்றத்துக்கும், பிற்கால வாழ்க்கையின் மாண்புக்கும் நல்ல பலமான அத்திவாரமிட்டது போலாகும். மதுவருந்துதல், விபசாரம் செய்தல், சூதாடல், களவுசெய்தல் முதலிய தீய ஒழுக்கங்களை அறவே களைந்து ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம், தவம், தானம், வந்தித்தல், வணங்குதல், வாய்மை, துறவு, அடக்கம், அறிவு ஆகிய அறங்களைக் கடைப்பிடித்தல் மனிதப் பிறப்பினை மாண்புறச் செய்வதாகும்.

மனிதனைப் புலன்கள் பல திக்கிலும் நாட்டத்தை வருவித்து அங்குமிங்கும் வலிக்கின்றன. இந்தப் பிறவி அண்டத்துக்கு வந்த மனிதன் குரங்கு மாதிரி நூறு பிடி பிடித்துக்கொள்வான். எத்தனை நூறு பிடி பிடித்தாலும் உண்மைப் பொருள் மனிதனால் கண்டறியப்படாவிடத்து மனிதப் பிறவி மாண்புடைத்தாகாது. தன்னிலேதான் பற்றுள்ளவனாய் இருந்து தன் கருமம் செய்து ''தவம் செய்வார். தம் கருமம் செய்வாராய்'' எத்துணைச் சிறிய தீமையும் அடுத்தவருக்குச் செய்யாமை தம் கருமம் செய்தமையாகும். இரண்டாம் ஆளுக்கு ஒருவன் செய்யும் தீமை அவன் தனக்கே அவம் செய்வதாகும். எனவே தம் கருமம் செய்வார் பிறர்க்குத் தீமை செய்யாமையே தன்னைத்தான் 'காதலித்துக் கொள்வதாகும். இதனையே வள்ளுவப் பெருந்தகையார்,

> **தன்னைத்தான் காதலனாயின் எனைத்தொன்றும்**
> **துன்னற்க தீவினைப்பால்**

எனக்கூறி அருளினார். அயல் வீட்டுப் பிள்ளைக்கு ஒருபிடி அன்னம் கொடுத்தால் தன் பிள்ளைக்கு ஒருபிடித் தசை வளரும் என்பது நீதி மொழி. சுய நலம் தேடுபவர் பிறருக்குத் தீங்கு விளையாத வகையில் தன்சுய நலத்தைப் பேணிக்கொள்ள வேண்டும். அவரே தம் கருமம் செய்து தம்வாழ்வு மாண்புறச் செய்தவராவர்.

பற்றற்ற வாழ்க்கை என்பது, அது பலன் கருதாது கடமையைச் செய்தலே. இதனால் மனிதன் துன்ப உணர்ச்சியைப் பெறுதவனாகின்றான். என்றுமுள்ள இன்பமே கடவுட் கருணையுமாவது. ஆதலால் அந்தக்கருணை வெள்ளத்திற் தளைத்தலினால் மனிதன் தன் பிறப்பின் மாண்பை உணர்ந்து வாழ்ந்து வீடுபேற்றை அடைந்து உய்தி பெறுதல் திண்ணமாகின்றது.

**க. சின்னப்பிள்ளை**

*1ம் வருடம்.*

பாரதி விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் சொல்லின் செல்வன்
திரு **செ. இராஜதுரை** அவர்கள்





மணிவாசகர் விழாவில் ''பிட்டுக்கு மண்சுமந்த...''
நாடகக் காட்சி.

# பெண்மை

ஆளுமே பெண்மை அரசு

எனப் பெண்மைக்கு ஓர் உயரிய அரசு பீடத்தை ஒப்பில் புலமைப் புகழேந்தியார் தந்தார்.

நாற்குணமும் நாற்படையாவையும் புலனு நல்லமைச்சாய்
ஆர்க்கும் சிலம்பே யணிமுரசாய் — வேற்படையும்
வாளுமே கண்ணு வதன மதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு.

என்பதே அப்பாடலாகும். பண்டைக் காலத்தவரிடம் ரத, கஜ, துரக, பதாதி என்னும் நால்வகைப் படை உண்டு. அது போல பெண்மை அரசுக்கும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நால் வகைப் படைகளுண்டு. அரசருக்கு ஆலோசனை கூறும் மந்திரிமார் அமைந்திருப்பது போல் பெண்மை அரசுக்கும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து புலன்களும் நன் மந்திரியாக அமைந்துள்ளன. அரச வாழ்வுக் கறிகுறியாக முரச வாத்தியம் ஒலிப்பதுபோல பெண்மை அரச வாழ்வுக்கு மங்கல அறிகுறியாக காற்சிலம்பு இன்னிசை அளிக்கின்றது. அரசர்க்கு வேற் படையும், வாளாயுதமும் உடனிருப்பது போல் பெண்மை அரசுக்கும் இரு கரு விழிகளும் மிளிர்கின்றனவென உருவகப்படுத்தியுள்ளார்.

அரசருக்கமையும் அமைச்சர்களில் ஒரு சிலர் துன் மதியாளராயு மிருத்தல் கூடும். அவர்களால் அரசனுக்கு வீழ்ச்சி உண்டாதல் திண்ணம். அது போலப் பெண்மை அரசுக் கமைச்சராயமைந்துள்ள ஐம்புலன்களில் சில தீய வழிகளில் வீழ்ந்து செல்லவும் கூடும். அவ்விதம் தவறு செய்யின் பெண்மை யரசினைக் கட்டாயம் வீழ்த்தும். அது குறித்தே புலவர் பெருமான் நல்லமைச்சராக விளங்க வேண்டுமென மறவாது கூறியருளினர். ஐம்புலன்களும் நல்லமைச்சராய் இருப்பின் பெண்மையரசை அசைக்கவோ, பறிக்கவோ எந்த ஆண்மகனுக்கும் முடியாது. இது பற்றியே,

''பெண்ணிற் பெருந் தக்க
யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்.''

எனத் திருவள்ளுவப் பெரும் தகை வியந்து கூறினர்.

நல்ல அமைச்சர்களைக் கொண்டும் நாற் படைகளைக் கொண்டும் காக்கப்படுவது அந்தக் கற்புச் செல்வமேயாம். அத்தகைய செல்வம் உறுதியாக விருக்குமாயின் பெண்மையிலும் சிறந்த பெருந்தகுதி வேறில்லையென நிச்சயமாகக் கூறலாம். மனித சக்திக்கு மேற்பட்ட தெய்வ சக்தியுள்ளவராக மகளிரை மாற்றுவது அசையா கற்பேயாகும்.

வேற்படையும் வாளுமே கண்களென வருணித்த பெரும் புலவர் தான் கூறிய தற்கேற்பப் பின்னர் நளவெண்பாவில்,

**சீரு விழித்தாள் சிலை வேடனவ்வளவில்**
**நீருய் விழுந்தானிலத்து.**

எனப் பொருத்தமுறக் கூறினுர். தவறு செய்வோரைத் தண்டிக்கவே வேலும், வாளும் வடிக்கப்படுகின்றன வாதலின் அவ்வழியில் கையாளப்பட்ட தமயந்தியின் கண்களை அவ்வாளும் வேலும் என முதலில் போற்றியது தோற்றத்தால் மட்டுமன்றித் தொழிலாலும் என அறியக்கிடக்கிறது.

இனி நாணம் இரு பாலார்க்கும் பொதுவான குணமாகும்.

ஆடவர் தமது கீர்த்திக்கு இழுக்கு நேருங்கால் இயல்பாக நாணுற்று வருந்துதல் இயல்பு. பெண்கள் தமது இயற்கையழகினைப் பிறர் உற்று நோக்க நேருமாயின் நாணி வருந்துவர். அதனுல் பிறர் எவரும் தன்னை உற்று நோக்கும்படி செயற்கையழகு செய்து கொள்ளச் சிறிதும் ஒருப்படார். இஃது பெண்மையின் உயர் குணமேயாகும். பொதுவாக ஆடவர் உரிய மனைவியிடம் நாணுகிருர். அப்படி நாணுதல் அவர்க்குச் சிறப்பாகாது. ஆனுல், பெண்களோ உரிய கணவரிடமும் நாணுறுவர். இது இவர்கட்கு இயற்கைச் சிறப்பாகும். நாணம் முதலிய நாற்குணங்களும் மறைந்தொழியின் அப்பெண் இறந்தவளுக்குச் சமானமாகும். தமயந்தியோ உத்தமகுண உயரிய வனிதையாதலின்,

**''இறவாத ஏந்திழையாள்''**

எனத் தொடர்ந்தும் கூறியுள்ளார்.

இனி மடம் என்னும் மகளிர்க்குரிய நாற் குணங்களுள் இரண்டாவதாகப் பெரியோர் வகுத்துள்ளனர். மடம் என்பதற்கு அறியாமை எனப் பொதுவாக பொருள் கூறுகின்றனரெனினும் பெரும்பாலும் மடமை என்பதே அறியாமை எனப் பொருள்படுகிறது. ஆகவே மடம் என்பதற்கு அறிந்தும் அறியாதவர்போல் ஒழுகுதல் என்பதே நேரிய பொருளாகும். பெண்கள் தெரிந்த ஒரு விடயத்தைக் கூட அவசரப்பட்டு வெளியிட முற்படுவது சிறிதும் அழகன்று. இதனையே ஒளவையாரும் ''பேதமையென்பது மாதர்க்கணிகலம்'' என்றருளினுர். அதாவது பேதமையென்று மகளிரை அழகு செய்யும் ஆபரணம் போன்றது எனப் போற்றுகின்ருர். அறியாமை என்பதே மகளிருக்குரிய குணமென்பது, ஒளவையாருக்கு முடன்பாடாயின் பேதமையென்பது மாதர்க்கு அவயவம் எனக் கூறியிருத்தல் வேண்டும். அவயவங்கள் உடம்பினின்றும் பிரிக்க முடியாதபடி உடன் தோன்றியவை ஆபரணங்களோ அவசியமாயின் தரிக்கவும், இன்றேல் நீக்கவும் கூடியவை. சமயம் நோக்கிப் பேதமையுள்ளதாக நடிப்பதே பெண்மைக்குரிய குணமெனக் கொள்வதே பொருத்தமாகும். இதனைத் தமயந்தி வாயிலாகவே புலவர் பெருமான் காட்டுகின்ருர். எவ்வாறெனில் நளன் தேவர்கள் வேண்டியபடி தமயந்தியிடம்

தூது செல்கிருன். தமயந்தியின் முன் நிற்பவன் அன்னம் கூறிய தான் மாலேயிட விரும்பிய நளன் என உணர்கின்ருன். இதை அறிந்ததும் அதனை மறைத்து தன் கற்புக்கிழுக்கு வராமலும் காதற் குருகிப் பீடழியாமலும்,

''காவல் கடந் தெங்கள்
கன்னி மாடம் புகுந்ததால்
யாவனே விஞ்சைச் கிறைவனே-தேவனே
உள்ளவா சொல்லென்ருள்
ஊசற் குழை மீது
வெள்ளவாள் நீர் சோரவிட்டு''

எனக் கூறியது பெண்மைக்கே பெருஞ் சிறப்பளிப்பதாகும்.

இனி அச்சம் என்பது ஆணின் அச்சம். உடல், பொருள், ஆவி ஆகிய இவைகளில் ஒன்றிற்காவது தீங்கு நிகழலாம் என எண்ணுவதால் உண்டாவது மகளிர் அச்சம் பெரும்பாலும் போதியகாரண மின்றி உள்ள நிறைக்கு ஊறு நேருமோவெனும் ஐயம் நேர்ந்துழி நிகழ்வது. ஆதாரமில் லாவிடிலும் சொற்ப காரணம்கொண்டே முடிகிறது. இவ்விந அச்சம் அமையப் பெருத பெண்களே தனி வழி சென்று கேவல நிலேயில் மானம் அழிந்து பல ஆபத்துக் குள்ளாகின்றன ரென்பதைப் பத்திரிகை வாயிலாக அறிகிருேம். இதனு லேயே முற்கால அறிஞர் பெண்கள் எப் போதும் சுயேச்சையாய் வெளிக் கிளம்ப அனுமதித்தாரில்லே; பிதா, கணவன், மைந்தர் ஆகிய இவர்களில் துணேவலி கட்டாயம் இன்றியமையாததெனக் கரு தினர். ஆகையினுல் அச்சமே பெண்மை யைப் பெருமையுறக் காவல்புரியும் பீடு டைய ஆயுதமெனக் கூறுதல் பொருந் தும்.

இனிப் பயிர்ப்பு என்பது உடலின் உணர்ச்சியைக் குறிப்பதாகும். மகளிர் உடலுக்குத் தம்மேற்படும் கரம் ஆடவரு டையது, பெண்ணினுடையது, உரிய புரு ஷனுடையது பிற புருஷனுடையது, எனக் காரிருளிலும் உணரும் சக்தி உண் டென்பது நூலோர் துணிவு. இதற்குச் சான்ருகக் கம்பர் பெருமான் மந்தரை தன் கருத்தை வெளியிட யெண்ணித் துயில்கொண்ட கைகேயியை எழுப்பப் பாதங்களே வருடியபோது,

''தீண்டலு முணர்ந்த அத்தெய்வக்
கற்பினுள்
நீண்டகண் அனந்தலும் நீங்கற்றிலன்''

கைகேயி தன்னேத் தீண்டியவள் மந்த ரையெனப் பரிசத்தால் உணர்ந்துகொண் டதனுலேயே திடுக்கிடாமலும் கண் களே விழியாமலுமிருந்தாள் என்று கூறிய கவியரசர் தீண்டலும் தீண்டியவரின்னு ரென்றுணரும் கூர்மை தெய்வக் கற்பு டையவர்க்கே இயல்பென உணரவைத் தார். இதையே பயிர்ப்பு என்று கோடல் தரும். இதுவும் கற்பைக் காக்கும் நூதன மாதலின் நாற்படையிலொன்ருகும். இந் தச் சைனியங்களி னுதவியால் கற்புக் கோட்டையை அரண் செய்து நெறி பிற ழாத ஐங்குண அமைச்சர்களுடன் வதனமாகியக் குடையின் கீழிருந்து அரசு செலுத்துவதாக கூறுகிருர். முகத்தை மதிக்கொப்பெனக் கூறுவது கவிஞர்கள் மரபு. அன்றியும் மதி தண்மையுமின்ப மும் தருவது இவ்விரண்டையும் நற்செய் கைகளில் ஈடுபடுவதால் பெறலாம். பெண் என்னும் பெயருக்கு இத்தகைய மாதரசிகளே உரியவராவர். இவ்வாறே பெண்மை பெருமை தர வாழ்வோமாக.

திருமதி அ. மார்க்கண்டு
விடுகை வருடம்.

# செந்தமிழின் பின் சென்ற திருவிளையாடல்

## (பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி)

சிவசம்பந்தமுடையது சைவம். தெய்வீகக் கலப்புடையது செந்தமிழ். எனவே செந்தமிழுக்கும் சைவத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. "கண்ணுதற் பெருங் கடவுளுங் கழகமோடாய்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த விப்பசுந்தமிழ்" என்று போற்றுகிறார் பரஞ்சோதி முனிவர். "மலைமுகஞ் சுமந்த புலவர் செஞ்சொல் கொண்டு வழி திறந்த செங்கை வடிவேலா" என்று நக்கீரனுடைய பாடலுக்கு அருள் புரிந்த முருகப் பெருமானின் திறத்தைப் போற்றுகிறார் அருணகிரியார். மேலும் முருகனை விழிக்கும்போதே "முத்தமிழோனே" என்றார்.

நமது நாயன்மார்களிடமிருந்து தமிழ்ப் பாடல்களை எதிர்பார்த்தான் இறைவன். "நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்" எனப் போற்றப்பட்டார் சம்பந்தர். "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என்று உருகுகிறார் அப்பர். இன்னும் இறைவன் சுந்தரனை நோக்கி "சொற்றமிழ் பாடு" என்று கேட்டமையும் நோக்கற்பாலதே மணிவாசகர் "உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்" என்று கூறியதும் வியக்கற் பாலதே. எனவே திருமுறைகளின் மூலம் நாயன்மார்கள் சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்த்தனர்.

நாயன்மார்களுள்ளும் ஒரு தனிப் பண்பு வாய்ந்தவர் சுந்தரர். இவர் இறைவனோடு கொண்ட தொடர்பு, பேச்சு உரிமைக்கு மிக வாய்ப்பான தொடர்பாகும். உலகிலே மிக அன்னியோன்னியமான ஒரு தொடர்பு எதுவென்றால் அது தோழமைத் தொடர்பு தான் என்பதில் சந்தேகமில்லை. இந்த முறையிலே நின்று எம்பெருமானிடத்து எப்பொருள்களையும் வலியுறுத்திப் பெற்று இருக்கிறார் சுந்தரர். சுந்தரரின் செந்தமிழைக் கேட்பதற்காக இறைவனும் எத்தனையோ திருவிளையாடல்களைப் புரிந்திருக்கிறன்.

ஒருவருடைய பெருமையையும் குணத்தையும் அவரவர்களுடைய நண்பரைக் கண்டு சொல்லி விடலாம் என்பது ஒரு பெரிய உண்மை. சிவபெருமான் சுந்தரரிடத்துத் தோழமை கொள்ள வந்தாரென்றால் சுந்தரரின் பெருமைக்கு வேறு சான்றே தேவையில்லை. ஒருவனை உயர்ந்த இடத்துக்கு உயர்த்துவது புலமைதான். சிவபெருமான் "தோழமையாக உமக்கு நம்மைத் தந்

தனம்'' என்று கூறிச் சுந்தரரை ஆட்கொண்டாரெனின், அதற்குச் சுந்தரரின் செந்தமிழ்ப் புலமையே காரணமாகும். சிவபெருமான் சுந்தரன் நிலேக்கு இறங்கினுரல்லர்; சுந்தரர் சிவபெருமானேடு தோழமை கொள்ளும் உயர்ந்த நிலேக்கு ஏற்றப்பட்டார் என்பதையே நாம் நோக்கவேண்டும்.

அருணகிரிநாதர் தனது திருப்புகழில் இதனே அழகாகக் காட்டுகிருர். ''கற்ற தமிழ்ப் புலவனுக்குமே மகிழ்வுற்றெரு பொற்கொடி களிக்கவே பொர கற்பனே நெற்பல அளித்த காரணனருள் பாலா'' என்று சுந்தரரைக் குறித்து கற்ற தமிழ்ப் புலவன் எனப் பாடுகிருர் அருணகிரியார், ஆனுல் சுந்தரனுக்கும் மற்றத் தமிழ்ப் புலவனுக்குமிடையிலே ஒரு பெரிய வேறுபாடு. மற்றைய புலவர்கள் உலகைப் பாடினர். புரவலர்களேப் பாடினர். பொன் பெற்றனர். ஆனுல் சுந்தரர் இறைவனேப் பாடினுர். பொன் பெற்ருர். பெண் பெற்ருர். புகழ்பெற்ற முத்தி வாழ்வும் பெற்ருர். இதனுல்தான்

''பொய்ம்மையாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர் காள்
இம்மையே தருஞ் சோறுங் கூறையும்
ஏத்தலா மிடர் கெடலுமாம்
அம்மையே சிவலோக மாள்வதற்கு
யாதுமையுற வில்லேயே.''

என்று பாடுகிருர் சுந்தரர்.

வாதவூரடிகளின் திருவாசகத் தேனேக் கேட்டு எழுதிக் கொள்வதற்காகப் பாண்டியனிடம் பிரம்படிபட்டார் இறைவன். அதேபோன்று சுந்தரனின் செந்தமிழை நயப்பதற்காகத் திருவாரூர் வீதியிலே இரவு இரவாய்க் காலிலே புழுதி தோயப் பரவையின் வீட்டுக்குத் தூது சென்ருர். இந்த நிகழ்ச்சியைச் சுந்தரர் செந்தமிழில் நாம் காணலாம்.

''அடியேற் கெளிவந்த தூதனேத்
தன்னேத் தோழமை யருளித்
தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்
நாதனே நள்ளாறனே யமுதை
நாயினேன் மறந்தென்னினேக் கேனே.''

நாம் ஒரு குற்றம் செய்துவிட்டால் குடும்பமும் சமுதாயமும் நம்மைத் தூற்றுகிறது. ஆனுல் சிவபெருமானே நாம் செய்யுந் துரிசுகளுக்குக் கூட உடனுய் இருந்து அறக்கருணேயாலோ மறக்கருணேயாலோ நமது குறையை நீக்கி ஆட்கொள்கிருன். ''நெற்றிக்

கண்ணைக் காட்டிய போதும் உன்பாடல் குற்றம் குற்றமே'' என்று தருக்கி மொழிந்த நக்கீரனுக்கு உய்வு கிடைக்கவில்லையா? இதனாலேயே சுந்தரர் ''யான் செய்யும் துரிசுகளுக் குடனாகி'' என்று இரங்கிப் பாடினார்.

சுந்தரனின் செந்தமிழுக்குப்பின் இறைவன் சென்றமையை, மற்றொரு சந்தர்ப்பத்தாற் காண்போம். சிதம்பர நடராசருடைய சிலம்பொலியை இருக்கும் இடத்திலேயே தியானித்துக் கேட்பதற்காகச் சேரமான் பெருமாள் நாயனார் தவமிருந்தார். நாடோறும் நடராச உபாசனை செய்தார். அவர் அன்பை ஏற்ற கூத்தனும் சிலம்பொலித்தான். ஆனால் ஒரு நாள் சிலம்பொலி கேட்கவில்லை. சேரமான் அயர்ந்தார். உடனே ஒரு அசரீரி கேட்டது. ''தில்லையிலே சுந்தரர் செந்தமிழைப் பாடுகின்றதால் இங்கு வரத் தாமதமானது.'' இதனைக் கேட்டவுடனே சுந்தரனைக் காண வேண்டுமென ஓடோடிச் சென்றார் சேரமான். ஒன்றுபட்டன உள்ளங்கள், சிலம் பொலியும் கேட்டது: வணங்கி நின்றனர்.

> ''மன்றினிடை நங்கூத்தாடல் வந்து வணங்கு வன்றொண்டன்
> ஒன்றும் உணர்வால் நமைப் போற்றி உரைசேர் பதிகம் பாடுதலால்
> நின்று கேட்டு வரத்தாழ்ந்தோம் என்றார் அவரை நினைப்பிப்பார்''

என்பது பெரிய புராணம்.

ஒரு முறை சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரருக்குப் பெரும் பொருள் கொடுத்தார். தன்னுடைய தோழனுக்கு மற்றொருவர் பொருள் கொடுத்தது இறைவனுக்குப் பிடிக்கவில்லைப் போலும். தன்னுடைய பூதகணங்களை ஏவித் திருமுருகன் பூண்டிக் கருகில் பொருள்கள் யாவையும் பறிமுதல் செய்வித்தார் இறைவன். உடனே சுந்தரர் பாடினார்.

> ''எல்லை காப்பதொன்றில்லையாகில் நீர் எத்துக்
> கிங்கிருந்தீரெம் பிரானிரே''

உன்னுடைய காவலுக்குட்பட்ட இடத்திலே இந்தக் களவு நடைபெறுமானால் நீவிர் ஏன் இங்கே இருக்கிறீர்? என்பது சுந்தரரின் கேள்வியாகும். இங்கே தோழனென்ற உரிமைக் குரல் தொனிக்கிறது. இந்த நிலையில் எம்பெருமான் பறிமுதலான பொருள்கள் அத்தனையையும் திருப்பிக் கொடுத்தார்.

எனவே எம்பெருமான் செந்தமிழ் கேட்கும் விருப்பினால் சுந்தரனுக்குப் பெண் கொடுத்தார்; பொன் கொடுத்தார்; செந்நெல் மலை கொடுத்தார்; தூது சென்றார் என்றால், நாமும் பாடும் பணியையே பணியாய்க் கொண்டு உய்தியடையலாம் என்பதற்குத் தடையுமுண்டோ!

# தூது ஒன்று செல்வாயா?

தாவுதற்கு நீ தெரிந்த
தளிரழகு மா மரத்தால்;
ஏவிவிட்ட தூ ததனால்
எங்கிருந்தோ வந் திறங்கி;
கூவுகின்ற மின் கருமைக்
குயிலே நீ குதூ கலிப்புத்;
தூவுகின்ற செய்தி தரத்
தூது ஒன்று செல்வாயா?

வந்தாள் திரிந்தா ளவள்
வசிகரிக்க வில்லை; இடம்
தந்த நெருக்க மதில்
தக்க அவளி னிடம்;
சொந்த மெனு முணர்வைச்
சொருக அவளி னுடல்;
சிந்துங் கலை யழகில்
சிந்தை பறி கொடுத்தேன்!

கறுத்த அவள் நிறத்தில்
கதித்த புதுக் கவர்ச்சி;
குறும்பு விழிக் குதவி
கொடுக்கு முடற் குழைவு;
கிறுக்குச் சுருட் கேசம்
கிளம்பித் தரு மசைவு;
இறுக்கி யென துயிரை
இழுத்துத் திரியு தடீ!

சாறூறி விம்மு மிதழ்
சறுக்கி நகை யுதிர்த்த;
பேறேறு நடை கொடுத்த
பெருமை உட லசைய;
நீறுநிறப் பட் டுடுப்பு
நிறைவுக் கொளிப் புதவச்;
சீறிவரு மொரு துடிப்பு
சிதறு முணர்வு தரும்!

பிரிந்தாள் சில நாளாய்ப்
பிடிப்பு எதிலு மின்றித்;
தரிக்க மனமு மின்றித்
தவிக்கு மெனது நிலை;
தெரிந்த உனக்கு மிகத்
தெளிவா யவளு மதைப்;
புரிந்தா ளெனும் மகிழ்வில்
புதைக்கப் புறப் படுவாய்!

மடக்கு முடல் வனப்பு
மங்கை யவ ளிருக்கு;
மிடத்தி னறி மதிப்பு
மிதந்து பல மைல்கள்;
கடக்க வருங் குளத்துக்
கரையி னருகி லொரு;
அடக்க வமைவு தரு
அழகுச் சிறு குடிலே!

பொ. தவநாயகம்
விடுகை வருடம்.

# சுவாமி நடராஜாநந்தா



முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தரின் திருவுருவப் படத்தைச் சுவாமி நடராஜாநந்தா அவர்கள் திரை நீக்கம் செய்கிறார்கள்.

# பாலருக்கு எழுத்துக் கற்பித்தல்

பாலருக்கு எழுத்துக் கற்பிக்கும் போது அந்த எழுத்தின் வடிவத்தையும் ஒலியையும் அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றலை ஏற்படுத்த வேண்டும். எழுதப் போகுமுன் பாலரின் மனம் கை கண் என்பன ஒத்து இயங்குதற்குத் தசைக் கட்டுப்பாடு வேண்டும். இதற்கு ஆரம்ப அப்பியாசமாக பொருட்களை அல்லது அட்டைகளைத் தெரிந்தெடுத்தல் அவற்ருல் கட்டிடங்கள் அமைத்தல் களிமண் போன்றவற்ருல் உருவமமைத்தல் கடுதாசியில் உருவம் கிழித்தல்போன்ற அப்பியாசங்கள் ஆரம்பத்தில் கொடுப்பது தசைக் கட்டுப்பாட்டையும் மன ஒருமைப்பாட்டையும் அடைவதற்கு உதவி செய்யும். பாலர்கள் எல்லோரும் குறித்த ஒருகாலத்தில் எழுத்துக்களை எழுதிவிடுவார்களென்றும் எதிர்பார்க்க முடியாது. ஆரம்ப எழுத்துப் பாடத்திற்கும் சித்திரப் பாடத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எழுத்துக் கற்பிக்க முன் சித்திரம் வரையும் வேலை கொடுக்கப்பட வேண்டும். வட்டம் பாதி வட்டம், சதுரம் நீள் சதுரம்,காய் கனி வகைகள் நாங்கள் உபயோகிக்கும் ஆயுதங்கள், கருவிகள், தளபாடங்கள், ஊர்வன, நடப்பன பறப்பன ஆகியவற்றை வரையச் செய்யலாம். பொதுவாக எழுத்துக்களின் வடிவ அம்சங்கள் பொருந்திய பொருட்களைத் தெரிந்து எடுக்கவேண்டும். இப்படியான வேலைகளில் பாலர் பள்ளிக்கு வருமுன் ஈடுபட்டிருப்பார்கள். பிள்ளை சுவர்கள் தளம் இவற்றில் கரியாலோ வேறு பொருளாலோ கருத்தற்றமுறையில் கீறும்பொழுது அவற்றைத் தடைசெய்தல் புத்தியானதல்ல.

எழுத்துப் பாடத்திற்குரிய ஆரம்ப வகுப்பில் அவர்கள் லாவகமாக சுதந்திரமாகத் தொழிற்படக் கூடியதாக ஒவ்வொருவருக்கும் தனித்தனிக் கரும்பலகை இருத்தல்வேண்டும். கைகளைத் திறம்பட அசைப்பதற்குப் பயிற்சி அளிக்கப்பட்ட பின் காகித அட்டைகளிலோ அல்லது வேறு மென்மையான மரத்திலோ ஆன உருவங்களை ஆசிரியர் தயாரித்து அதன்மீது மாணவரைத் தங்கள் விரலால் வருடச் செய்யலாம். சற்றுக் காலம் செல்ல உண்மையான எழுத்துக்களோடு தொடர்புபடுத்துவதை ஆரம்பிக்கலாம். இலகுவாகப் பரிசிக்கக்கூடிய வெல்வெற் (Velvet) துணிகளாலோ அல்லது கரடுமுரடான அரத்தாள்களை உபயோகித்தோ எழுத்தின் வடிவை உணரச் செய்யலாம். எழுத்தை எழுதி அவற்றின்மீது குச்சிகள் குத்தல் பல திற விதைகளை அடுக்குதல் பிள்ளைகள் விரும்பக்கூடிய அப்பியாசங்களாகும். காற்றில் எழுதுதல் ஒருவர் முதுகில் மற்றவர் எழுதுதல் ஆசிரியர் எழுதிய எழுத்துக்களின்மேல் நிறக் கட்டியால் வரைதல். இவையும் நல்ல அப்பியாசங்களாகும்.

எழுத்து அறிவுள்ள பிள்ளைகள் இவ்வித அப்பியாசங்களில் கரிசனை காட்டார்கள். ஆகவே பிள்ளைகளைத் தரம்வகுத்து ஆசிரியர் அவர்கள் மீது தனிக் கவனம் செலுத்தவேண்டும். எழுதுகோல் பாவித்தலை(Ball Point)பேனு பாவித்தலை விரும்புவார்களாயின் அங்ஙனம் செய்யவிடுவது நல்ல முறையல்ல எனப் பலரும் அபிப்பிராயப்படுகின்றனர். நுண்ணிய கூறுள்ள

கருவிகளை உபயோகிப்பவருக்குத் தசை நார்ப் பயிற்சி பெற்றிருக்கவேண்டும்.

பாலர் கீழ்ப்பிரிவின் கடைசித் தவணையில் சொல்வ தெழுதல் ஆரம்பிக்கலாம். அதுவும் விளையாட்டாகவே இருத்தல் வேண்டும். தங்கள் சொந்தப் பெயர் எழுதல். வீட்டிலும் பாடசாலையிலும் உள்ள பெயர்கள், விளையாட்டுக் கருவிகளின் பெயர்கள், விருப்பமான பொருட்களின் பெயர்கள், இவற்றை விருப்பமாக எழுதுவார்கள். எழுத்தும், வடிவும், தெளிவும், விரைவும் அமைவும் பிரதானமாகக் கவனிக்கப்பட்டு வந்தால் பின்னுக்கு ஏற்படும் பல பிழைகளைத் தவிர்க்கலாம். எழுத்துக்களை அமைவாக எழுதுதற்குப் பின்வரும் படிமுறையாக எழுத்துக்கள் அமைய வேண்டும்.

(1) ட, ப, ம, ய, ழ.

(2) ஈ, ர, ந, ற, ஐ, க, ச, த,

(3) எ, ஏ, ஞ, ஒ, ஓ, ஔ,

(4) வ, ல, ண, ன,

(5) அ, ஆ, இ, உ, ஊ,

எழுத்துப் பயிற்சியில் பார்த்தெழுதல் ஓர் சிறந்த அப்பியாசம். மாணவர் புத்தகத்தைப் பார்த் தெழுதுவதைவிட ஆசிரியர் கரும்பலகையில் எழுதுவதைப் பார்த்து எழுதுவதுதான் சிறந்தது எனக் கூறுகின்றனர். அப்போது மாணவர் எழுத்தின் அமைவு தொடங்கும் இடம் முடியும் இடம் என்பனவற்றை நன்கு அவதானிப்பர். பார்த் தெழுதல் கீழ் வகுப்புகளில் கட்டாயம் இடம் பெறவேண்டும். பார்த்தெழுதல் திருத்தமான கையெழுத்திற்கு வழிகாட்டும். தெளிவாயும் விரைவாயும் எழுத அது தூண்டு கோலாயிருக்கும். உற்று நோக்கும் பழக்கமும் ஆற்றலும் அமைவதுடன் உளப் பதிவும் ஏற்படும். நல்ல சொற்றெடர்கள், பழமொழிகள், மனப் பாடமாவதற்கு உதவி செய்யும். கவனக் குறைவான மாணவருக்குக் கவனமுண்டாக்கல் ஒவ்வொரு சொல்லுக்கும் கருத்து உண்டென்பதை அறியலாம். குறிக்கோளின் உபயோகங்களை அறிய உதவிபுரியும். புதிய சொற்களில் வரும் எழுத்துக்களுக்கும் பழைய சொற்களின் எழுத்துக்களுக்கும் உள்ள வித்தியாசத்தை அறிய முடியும் ஆசிரியர் கவர்ச்சியான பகுதியைத் தெரிந்தெடுக்க வேண்டும். எழுதும்போது மாணவர் மௌனமாகச் சொல்லிச் சொல்லி எழுதுவதால் மௌன வாசிப்புக்கும் இது துணைபுரிகிறது. சொல்வ தெழுதற்குத் தெரிந்தெடுக்கும் பகுதி ஒருமுறை நன்கு படித்துக் காட்டப்படவேண்டும். ஏற்கனவே அது பிரதிபண்ணலுக்குக் கொடுக்கப்பட்டதாக இருப்பின் நன்று. சொல்வ தெழுதல் பயிற்சிக்கு முன் எழுத்துக் கூட்டல் பயிற்சி கொடுபடலாம். ஆசிரியர் சொற்களைத் திரும்பச் சொல்லுதல் கூடாது. சொல்லுவதைப் பொருள் தொடர்ந்து நிற்குமட்டும் சொல்லுதல் வேண்டும்.

நன்றாய் முழுவதையும் கேட்டுப் பொருள் உணர்ந்த பின்னரே எழுதச் செய்ய வேண்டும். நாம் எழுதுவதைப் பிறர் படிக்கக் கூடியதாய் தெளிவாய் எழுதவேண்டும். எழுத்துக்கள் தனித்தனியாய் இருக்கவேண்டும், படிப்பதையும் எழுதுவதையும் மிக விரைவாய் செய்தல் வேண்டும். விரைவின் அர்த்தம் தெளிவைப் பறிகொடுப்பதல்ல. ஒருவனுடைய எழுத்து அவனுடைய தனித்துவத்தை வெளிப்படுத்தும் ஒரு சாதகமாக அமைந்திருக்கிறது. எழுத்துக்களை அலங்காரமாக எழுதும் ஆற்றல் படைத்தோர் சித்திரக் கலையில் ஈடுபாடுடையோராவர்.

பதினாறு வயதையடைந்தவர்கள் எழுதும் எழுத்து ஒவ் வொன்றிலும் அவர்களின் தனித்தன்மை துலங்கும்.

எழுத்துக் கூட்டல் அல்லது உச்சரிப் புக் கற்பித்தல் ஞாபகத்தைச் சா ரு ம், ஆகவே ஞாபகத்தை அடிப்படையாகக் கொண்ட பல முறைகள் பின்பற்றப் படு கின்றன. சொற்களை உச்சரிக்கப் பயிற்று தற்குப் பிரதானமான மூன்று படிக ளுண்டு.

(1) பார்வையால் — by Sight
(2) ஒலியால் — by Sound.
(3) தசையசைவால் — by Mascular Movement.

ஆகவேதான் உச்சரிப்பை ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு இம் மூன்றும் ஒன்று சேர்ந்த பார்த்துப் பிரதிபண்ணல் முறை மிகச் சிறந்தது. பிள்ளை பார்த்து எழுதும்போது அது அவனது மனதில் பதி கிறது. அசைவும் ஞாபகமும் ஏற்படுகின் றன. அப்படி எழுதும்போது அதைத் தனக் குள்ளே உச்சரிக்க வேண்டும். இப்படியாக மூன்று முறைகளும் கைக் கொள்ளப் படு கின்றன. எழுத்துக் கூட்டலில் பயிற்சி யளிக்கச் சொல்வ தெழுதலும் அவசியம் இடம் பெறவேண்டும். இதுதான் உச்சரிப் பிற்குச் சிறந்த வழி யெனக் கரு தக் கூடாது. என்ன எழுதமுடியும் என்ன எழுத முடியாது என்பதைப் பரீட்சிப்ப தற்காகத்தான் சொல்வதெழுதல் கொ டுக்கப்படுகிறது.

**சாரதாதேவி-சிவபாலர்**
விடுகை வருடம்.

# — பரத நாட்டியம் —

கலைஞர் ம. கைலாயப்பிள்ளை
(நாட்டியப் பேராசிரியர்)

நாட்டியம் கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய கலை. இது உள்ளத்தை அங்க அசைவுகளாலும், முகத்தாலும், ஆட்டத்தாலும் வெளிப்படுத்தும் கலை. இதை அவ்வத்தேச மக்கள் தம் சூழல், பழக்க வழக்கம், பண்பு சமயம் என்பவை கட்சியையே அமைத்திருக்கிறார்கள். இதுபோலவே தமிழர்களும் தம் பண்பு, சமயம், பழக்க வழக்கம், சூழல் என்பவற்றிற்கியைய நாட்டியத்தைச் சாந்திக் கூத்து, விநோதக் கூத்து என இரண்டாக வகுத்திருக்கின்றனர். சாந்திக் கூத்தை வேத்தியல் என்றும் விநோதக் கூத்தைப் பொதுவியல் என்றும் கூறுவர்.

சாந்திக் கூத்து:- சொக்கம், மெய், அவிநயம், நாடகம் என நான்காகப் பிரியும்.

விநோதக் கூத்து:- குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு தோற்பாவை எனப் பிரியும் இவையெல்லாம் இப்போது வடமொழியாளரின் மொழித் திணிப்பால் மாறிவிட்டன. இப்போது வடமொழியாளரின் முறையே பயின்று வருகின்றன. அவர்கள் நாட்டியத்தை நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என மூன்றாக வகுப்பர்.

சொக்கம்: என்பது நிருத்தத்துக்குச் சமமானதே. இது தாளத்தை அடிப்படையாகக் கொண்ட அழகுக்கான ஆட்டமாகும். பரத நாட்டியத்தில் வரும் அலாரிப்பு ஜெதிஸ்வரம் என்பனவும் ஜெதிகள் என்பனவும் இதனுள் அடங்கும். இவையெல்லாம் பொருளின்றியாடப்படுபவையே.

மெய், அவிநயம்: நிருத்தியத்துக்குச் சமமானவை. பொருளுக்கான ஆட்டங்களாகும். இவை பாட்டின் பொருளுக்கியைய ஆடுவது, பாட்டின்றிப் பொருள் விளங்க ஆடுவது என இரு வகைப்படும். முன்னையதற்கு சப்தம், வர்ணம், பதம், தில்லானாவில் வரும் பாட்டுக்கள் என்பவைகளுக்கும், சுலோகம் முதலியவைகட்கும் உதாரணமாகும். பின்னையதுக்கு வேடன், பாம்பாட்டி, மயில், வலைஞன் முதலிய ஆட்டங்களுக்கும் உதாரணமாகும்.

நாடகம்: இது நாட்டியத்துக்குச் சமமானது. பழைய கதைகளைப் பலர் சேர்ந்து நடித்துக் காட்டும் நாட்டிய நாடகங்களெல்லாம் இதற்கு உதாரணமாகும் மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்தின் சில கிராமங்களிலும் ஆடப்பட்டுவரும் வட மோடி, தென் மோடிக் கூத்துகளெல்லாம் பெரும்பாலும் நாட்டிய நாடகங்களே ஆனாலும் அவைகள் நடிகன் பாடுதல், பாடிக்கொண்டாடுதல் கைகளிலே கைக் கிளி, வாள், வில் சில கருவிகளைப் பிடித்தாடுதல் முதலிய சில வித்தியாசங்களையும் கொண்டிருக்கின்றன. அத்தோடு இக்காலத்திலே கைக்குறிகள், இராகங்கள், சொற்கட்டுக்கள் என்பன தேய்ந்த நிலையிலேயே காட்சியளிக்கின்றன. என்றாலும் இவற்றின் மூலம் நாட்டிய நாடகங்களே.

# நாட்டியத்தின் உறுப்புக்கள்

நாட்டியத்துக்குக் கைக்குறிகள், தலையசைவுகள், பாதநிலைகள், கண்குறிகள், மெய்ப்பாடு சுவை என்பன முதல் உறுப்புக்களாகவும் தோள், கன்னம், புருவம், நா, வயிறு, இடுப்பு, முதுகு, தொடை, மணிக்கட்டு, உடை, இசை என்பன துணை உறுப்புக்களாகவும் கொள்ளப்படும். இவற்றுள் கைக்குறி, மெய்ப்பாடு என்னும் இரண்டையுமே இங்கு விளக்குவோம் ஏனையவற்றை விரிவஞ்சிவிட்டுவிடுவோம்

கைக்குறிகள்: இவை ஒற்றைக்கைக்குறி இரட்டைக் கைக்குறி என்றும் எழிற்கை தொழிற்கை என்றும் பிரியும். இவற்றுள் ஒற்றைக் கைக்குறி இணையா வினைக்கை அல்லது பிண்டி என்றும் இரட்டைக் கைக்குறி இணைக்கை அல்லது பிணையல் என்றும் பிரிந்து நிற்கின்றன. எழிற்கை என்பது அழகுக்காகக் காட்டும் கை, தொழிற்கை என்பது பொருளுக்காகக் காட்டும் கையாம். இக் கைக்குறிகளை நாட்டிய ஆசிரியர்கள் பலர் பலவாறு கூறுகின்றனர் என்றாலும் அவிநய தர்ப்பண ஆசிரியரையே இக்காலத்தார் அதிகமாகக் கடைப்பிடித்துக் கை முறைகளை வழங்குகின்றனர். சிலப்பதிகார உரையாசிரியர் ஒற்றைக் கைக்குறிகள் 33 எனவும் பரத சாத்திர ஆசிரியர் 23 எனவும் சிற்ப நூலார் 32 எனவும் அபிநயதர்ப்பண ஆசிரியர் 28 எனவும் பலவிதமாகக் கூறுகின்றனர். அவற்றுள் அபிநயதர்ப்பண ஆசிரியர் பதாகம், திரிபதாகம், அர்த்தபதாகம், கத்தரீமுகம், மயூரம், அர்த்தசந்திரம், அராளம், சுக துண்டம், சிகரம், கபித்தம் கடகமுகம், வாங்கூலம், அல்பதுமம் சதுரம், சூசி, சந்திர கலை, பத்மகோதும் சர்ப்பசிரம், மிருக சிரம், சிம்மமுகம், பிரமரம், அம்சாசயம், அம்சபட்சம், சம்தம்சம், முகுளம், தாம்பிரசூடம், திரிசூலம், முஷ்டி என இருபத்தெட் டென்பர். இரட்டைக் கைக்குறிகளும் பலபல விதமாகக் கூறப்படுகின்றன ஆயினும் அபிநயதர்ப்பண ஆசிரியர் அஞ்சலி, கபோகம், கர்க்கடகம், சுவத்திகம் டோலம் புஷ்பபுடம், உத்சங்கம், சிவலிங்கம், கடகா, வர்த்தனம், கத்தரீ சுவத்திகம், சகடம், சங்கம், சக்கரம், சப்புடம், பாசம், கீலம் மத்சயம், கூர்மம் வராகம், கருடன், நாகபங்கம், கட்வா, பேரண்டம் என 23 என்பர்.

இனிப் பரத நாட்டியப் பகுதிகளாக இக்காலத்தில் ஆடப்படுவன. அலாரிப்பு, ஜெதிஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், தில்லானு என்பனவாகும். இவற்றுடன் சேத்திரி ஐயர் பதம், கர்ணுமிர்த சுலோகம் அஸ்டபதி என்பவைகளையும் சேர்த்துக்கொள்வோம். பழைய காலத்திலே நாட்டியம் ஆரம்பமாகுமுன் மேளப் பிராப்தி, தோடய மங்களம் கவுத்துவம் என்பன மேடையில் நடைபெற்ற பின்னரே நாட்டியம் ஆடுபவர். தோன்றி ஆடும் வழக்கம் இருந்தது. இப்போ இது அருகிவிட்டதென்றே சொல்லவேண்டும்.

# மெய்ப்பாடு

மெய்ப்பாடென்பது பொருட்பாடு அதாவது உள்ளத்தே நிகழும் நிகழ்ச்சியை மற்றவர்கட்குக் காட்டப் புகுந்த வழி முகத்திலே உண்டாகும் மாற்றம். இந்த மாற்றத்தை தொல்காப்பியர்

''நகையே, அழுகை இழிவரன் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உலகையென்
றப்பா லெட்டே மெய்ப்பாடென்ப''

என எட்டென்று வடமொழி ஆசிரியர்கள் சாந்தம் (நடுநிலை) என்பதையும் சேர்த்து ஒன்பது என்றும் கூறுவர். இந்த மெய்ப்பாடு அல்லது சுவை தோன்றுவதற்கு மூல காரணமாய் அமைந்தன பொருள், பொறியுணர்வு குறிப்பு விறல் அல்லது சத்துவம் என்பனவாகும்.

வேம்பு, கரும்பு என்னும் பொருள்களும் நாக்கு என்ற பொறியுணர்வும் சேர்ந்த வழி கைப்பு, இனிப்பு என்ற சுவைகள் தோன்றுகின்றன அதுபோலவே மேலே காட்டப்பட்ட ஒன்பது சுவைகளும் சுவைக்கப்படும் பொருள் பொறியுணர்வு என்பன சேரும் வழிபிறக்கின்றன. இந்தச் சுவைகளே நாட்டியத்தின் தலையாய இடத்தை வைத்திருக்கின்றன. உள்ளத்தை வெளிப்படுத்தும் வகையைப் பல நாட்டு நடனங்கள் கொண்டுள்ளன வெனினும் பரத நாட்டியத்திலே அது உயிர் போன்று அமைந்திருக்கின்றது பரத நாட்டியத்தைத் தமிழர்கள் இறைவனுக்கே அர்ப்பணித்திருக்கின்றனர் நாட்டியத்தில் வரும் ஒவ்வொரு பாடலும் ஆடலும் அவன் புகழ் குறிப்பனவாகவே அமைந்திருப்பதைக் காணலாம். தமிழர்கள் இறைவனையே ஆடல் அரசனுக்கி மகிழ்ந்தனர், மகிழ்கின்றனர். எனவே நாட்டியம் மேலான தெய்வ இன்பத்தைத் தரும் என மேலோர் கூறினர் நாட்டியத்தினல் உடல் நலனும் உளநலனும் பண்பும் தெய்வ பக்தியும் வளரும். ஆதலின் நாம் அனைவரும் அக்கலைக்குப் புத்துயிர் அளித்துக் காக்கவேண்டும் நம் பிள்ளைகள் ஒவ்வொருவரும் இக் கலையைப் படித்தால் உடல் நலம் பெறுவர், உள நலம், பெறுவர். எனவே கலையைப் போற்றி வாழ்வோமாக.

* * *

# நேற்று...!
# இன்று...!!
# நாளை...!!!

நாடு முன்னேறுகிறது. நாட்டின் தரம் முன்னேறுகிறது, நாட்டின் பொருளாதாரம், கலை, கலாசாரம் முன்னேறுகிறதென்றால் அடிப்படையில் முன்னேறியிருக்கவேண்டியது சமுதாயம். உலகம் தோன்றிய காலந் தொட்டு சில சமுதாயங்கள் சீரும் சிறப்பும் பெற்று பேரும் புகழுடனும் வாழ்ந்துள்ளன. இச் சமுதாயங்களில் தமிழ்ச்சமுதாயம் பண்டைக்காலந் தொட்டு வலிவும், பொலிவும், பெற்றுப் பெருமையுடன் வாழ்ந்துவந்துள்ளது என்பது வரலாறு தரும் பாடம்.

தமிழ்ச் சமுதாயத்தினர் ஒரு காலத்தில், தன் மொழியை, மானத்தை, வீரத்தைக் கண்ணிலும் மேலாக மதித்து வந்துள்ளார்கள்.

தன் தாய்மொழியையும், தமிழினத்தையும் பழித்து ஏளனம். செய்த கனக விசய குறுநில மன்னர்களைப் போரில் வென்று, அவர்களின் தலைகளிலே இமயத்திலிருந்து கல்லேற்றி வந்து கற்புக்கரசி கண்ணகிக்கு சிலை வடித்தானும் சேரன் செங்குட்டுவன் என்று சிந்தையை அள்ளும் சிலப்பதிகாரம் பாடம் புகட்டுகிறது. அவன் அன்று இன்பத் தமிழ் மொழியை மட்டுமல்ல, தமிழர்களின் மானத்தையும், வீரத்தையும் காப்பாற்றினன். ''ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு, இரவின் இளிவந்தது இல்'' என்ற வள்ளுவனின் குறளை மெய்ப்பிக்க சோழன் செங்கணனோடு பொருது தோற்ற சேரமான் கணைக்காலிரும்பொறை என்ற அரசன் சிறையில் கைதியாக இருந்தபோது தாகம் தீர்க்கத்தண்ணீர் கேட்டானும் காவற்காரனிடம். காவற்காரன் நேரம் தாழ்த்தி நீர் கொண்டு வந்தபோது, நேரம் தாழ்த்தி வந்த நீரைக் குடித்து மானமிழந்து உயிர் வாழ்வதிலும் உயிர் நீத்தலே பெரிதென் எண்ணிக் கொண்டு, நீரையும் வெளியில் சிந்தவைத்து நீர் கெண்டுவந்த பாத்திரத்தையும் உடைத்து தற்கொலை செய்து மாண்டான். மானத்தைக் காத்தான் அன்று.

தமிழனம் அன்று வாணிபத்திலும் புகழ் பெற்று விளங்கியுள்ளது. உலக நாடுகளுக்கெல்லாம் முத்தும், பட்டும், ஏலமும் கராம்பும்,வாசனை திரவியங்களும் அனுப்பியது. செங்கோல் பிடித்து மண்டலத்தை யெல்லாம் ஆண்ட மன்னர்களை யெல்லாம் தன் தாள்பிடிக்க வைத்து, உலகத்தையே ஆட்டிப்படைத்த உலகழகி கிளியபட்ராவின் கழுத்தை அழகு படுத்திய முத்துக்களைக் கொடுத்தவர்கள் நாம் அல்லவா? ஆனல்!

அன்று வீரத்திலும் சலித்தவர்கள் அல்ல நாம். கலம் பல செலுத்தி கடல் கடந்து களம் பல கண்டு வெற்றி பல

ஈட்டினுன் மாவீரன் இராச இராஜேந்திரன். உலக வரலாற்றில் எவ்வளவு இடத்தைப் பிடித்ததோ பிரான்சியப் புரட்சி, அதே இடதைப் பிடித்து உலக மக்களை யெல்லாம் கதிகலங்க வைத்த கலிங்கத்துப் புரட்சியும் நமது நேற்றையச் சந்ததியினரின் வீரத்தைக் காட்டுவதல்லவா?

இந்தப் பரந்த உலகம் எப்பொழுது தோன்றியதோ அன்றே நம்மினம் தோன்றியுள்ளது. எங்குபார்த்தாலும் நம்மினத்தின் புகழ் படிந்து கிடப்பதை நாம் காணலாம். உலகத்திலே நகாரிகம் உதயமான நைல் நதிக்கரை யோரங்களில் நம் தமிழ் இனம் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கு ஆதாரமாக எழில் மிக்க எகிப்தில் வாழும் மக்கள் இப்பொழுதும் தங்கள் பெயர்களை தனித் தமிழ்ச் சொற்களான முத்துபாண்டியன் என்ற பெயரைத் தாங்கியுள்ளார்கள் என்பதை அங்கு சென்று திரும்பியவர்களும், வரலாற்று ஆசிரியர்களும் கூறுகிறுர்கள். இதிலிருந்து தெரிகிறதல்லவா நேற்று நமது இனம் நாகரிகத்திலும் மேன்மை தாங்கியவர்களாகவும் இருந்துள்ளார்கள் என்று.

இப்படியாக வீரத்தில், மானத்தில், வாணிபத்தில் தனிமதிப்புப் பெற்று புகழுடன் வாழ்ந்த நம்மினம் இன்று எந்த நிலையிலிருக்கிறது? நாம் விழியெனக்காத்து மன்னர்களின் அரவணைப்பிலும் புலவர்களின் நாவிலும் வாழ்ந்த நம் மொழி அழிக்கப் படுகிறது. நமக்கென்ருெரு நாடு இல்லை, நமக் கென்ருெரு மொழியில்லை, அன்று பேருடன் வாழ்ந்த இனம் இன்று அழிக்கப்படுகிறது, நம் மினம் இருந்ததாக எந்தவிதமான சான்றிதழ் கூட இல்லாமல் போவதற்கு இப்பொழுதே அடிக்கல் நாட்டப்பட்டு அதைக்கட்டி யெழுப்புகிறுர்கள்.

இன்றைய நிலையில் நமது மொழி அழிக்கப்பட்டால் நமது இனம் கட்டாயம் அழிக்கப்படும் என்பதை நாம் நன்ருக அறியக்கிடக்கிறது. நாளை நமது கலை, கலாசாரம், பண்பாடு அற்று இங்கு தமிழர்கள் வாழ்ந்தார்களா? என்று வரலாற்று ஆசிரியர்களும், சரித்திர ஆசிரியர்களும் நமது வருங்காலச் சந்ததியினர்களும் கேட்பார்கள்.

ஆகவே நேற்று நம் இனம் எப்படி புகழுடன் வாழ்ந்ததோ அப்படியே வாழ வைத்து எதிர்காலச்சந்ததியினர்களையும், மானமுள்ளவர்களாய், வீரமுள்ளவர்களாய் வாழ வழிவகுப் போம்.

**ஆ. கந்தையா**
*1ம் வருடம்.*

★

# ஓங்காரமாய் விளங்கும் நாதன்

**ப**ண்டைத் தமிழ் நன் மக்கள் இறைவனை இயற்கையிலும், திருவுருவத் திருமேனிகளிலும், ஒலியிலும் கண்டு வழிபாடாற்றி வந்தார்கள். இயற்கையில் அழகைக் கண்டார்கள். அவ்வழகு ''கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பாக'' இருந்தது. அதைப் புனைந்த பேரழகனை 'முருகன்' என்று பெயரிட்டார்கள் மெய்யடியார்கள், மெய்ப்பொருட் காட்சியை விரும்பினார்கள், அன்னார் வேண்டியவாறு பற்பல வேடங்களில் காட்சி கொடுத்தான் எம்பெருமான். அவை இன்று திருக்கோயில்களில் இறைவன் தன் திருவுருவங்களாக வழிபாடாற்றப்பட்டு வருகின்றன. மக்கள் இயற்கையில் ஓவாது ஒலித்துக்கொண்டிருக்கும் ஓசையை உற்றுக் கேட்டார்கள்; ஆராய்ந்தார்கள்; ஆதி முதல்வனை அறிந்தார்கள். இங்கு ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட விடயம் இறைவன் ஓங்காரமாய் விளங்குவதும், அத்தத்துவத்தின் உட்பொருளுமேயாம்.

''ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே'' என்றார் திருநாவுக்கரசர். ''ஓம்'' என்னும் ஓசை எழுத்தொலிகட்கெல்லாம் முதல்வதாய் அகத்திலும் புறத்திலும் ஓவாது ஒலித்துக்கொண்டிருக்கிறது. கடற் கரைக்குச் சென்றோ அன்றேல் பெருங் காட்டகத்துக்குச் சென்றோ அன்றேல் திறந்த வெளிக்குச் சென்றோ உற்றுக் கேட்போமானால் எங்கும் 'ஓம்' என்னும் ஓசை ஒலிப்பதைக் கேட்கலாம். ஏன்? ஓர் வெறும் செம்பையோ, குடத்தையோ நம் காதோடு பொருத்திக் கேட்போமானால் அவ்வோசையைக் கேட்கலாம். இவையெல்லாம் நாம் புறத்தே கேட்கும் ஓசை. நம் இரு கரங்களாலும் வெளியோசை உட்செல்லாவண்ணம், இரு காதுகளையும் இறுகப் பொத்தினால் புறத்திலே ஒலிக்கும் அதே ஓங்கார ஓசை அகத்திலும் ஒலிப்பதைக் கேட்கலாம்.

அவ்வோசை எத்தன்மைத்தது, எங்கிருந்து வருவது என்னும் இன்னோரன்னவற்றை ஆராயப் புகுந்தனர் பலர். அவருட் சிலர் வெற்றி கண்டனர். அவ்வருள் ஞானியரின் கூற்றுக்களை இங்கு ஆராய்வாம்.

''ஓம்'' என்னும் சொல் ஓர் தனித் தமிழ்ச் சொல். ''ஓ'' என்னும் அடிப்படையில் பிறந்த ஓசை, ஒலி, ஓதை என்னும் ஓசையைக் குறிக்கும் சொற்கள் தமிழிலேயே அதிகம் உண்டு. ஆனால் வடமொழியில் அவ்வாறில்லை என்று மொழி நூல் வல்லார் கூறுகின்றனர். இதைத் தமிழ்மறை ''பழமறை'' என்றோதும். வடநூலார் ''பிரணவம்'' என்பர். ''ஓம்'' என்பதற்கு முண்டகம் முதலிய உபநிடதங்கள் கூறும் வரிவடிவம் தமிழிலேயே இருக்கின்றது'' என்று ஓர் அறிஞர் கூறுகின்றார்.

தமிழ்க் கடவுளாகிய முருகன் தன் தந்தைக்கு ஞானோபதேசம் செய்யும் போது ஓங்காரத்தின் உட்பொருளைத் தமிழிலேயே விரித்தோதினான் என்பதை

''கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழாற் பகர்வோனே''

என்றுஅனுபூதிச் செல்வர் அருணகிரியப்பர் கூறிப் போந்துளார்.

ஓசைகள் எல்லாம் காதினுற் கேட்கப் படுபவை. "ஓ" என்னும் எழுத்தின் வடிவத்தை நம் காதின் வடிவத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இரண்டும் ஒத்த வடிவத்தினதாய் அமைந்திருப்பதைக் காணலாம். "ஓ"க்கு வரிவடிவம் கொடுத்த நம் மூதாதையரின் மதி நுட்பத்தை யெவ்வாறு புகல்வது.

"ஓம்" என்னும் சொல் பிறப்பதற்கு "அக"ர, "உக"ர, "மக"ர என்னும் மூன்று எழுத்துக்களின் சேர்க்கை வேண்டப்படுகின்றது. இம்மூன்று எழுத்துகளிலும் திருவருட் சக்தி உயிர்கள் மேலுள்ள அன்பு மேலீட்டால் செய்யும் ஆக்கம், அளவு, இறுதி என்னும் மூன்று திருவருட் செயல்களின் கருத்துக்கள் பொதிந்துள்ளன.

'அ' என்னும் எழுத்து எல்லா எழுத்துக்களும் பிறப்பதற்கு மூலமாய் அமைந்துள்ளது அவ்வெழுத்தை உச்சரிப்பதற்கு எவ்வித சிரமமும் வேண்டப்படுவதில்லை. சாதாரணமாக வாயைத் திறந்த உடனேயே 'அ' பிறந்துவிடுகிறது. இச்செயல் இறைவி படைத்தற் றொழிலைச் செய்யும் தத்துவத்தைப் புலப்படுத்துகிறது.

"உ" என்னும் எழுத்து உச்சரிக்கப்படும்போது உதடுகள் இரண்டும் குவிந்து சிறிதுநேரம் நிற்பதை அவதானிக்கலாம். இச்செயல் படைக்கப்பட்ட உயிர் சிறிதளவு காலம் இவ்வுலகில் வாழ்வதைக் குறிக்கிறது இதுவே அம்மையின் காத்தற் றொழிலாகும்.

"ம்" என்னும் எழுத்தை உச்சரிக்கும்போது உதடுகள் இரண்டும் மூடிவிடுகின்றன. இச்செயல் ஓரளவு காலம் இவ்வுலகில் வாழ்ந்த உயிர்கள் பூத உடலை நீத்து விண்ணுலகு ஏகுவதைக் குறிக்கும். இதுவே மறைதற் றொழிலாகும்.

எனவே உயிர்களின் ஆக்கம் அளவு இறுதி என்னும் முப்பருவங்களையும் இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், என்னும் முத்தொழிலாகச் செய்கின்றான், என்பதை ஓங்காரம் சிறப்புற விளக்குகின்றது.

இவ்வோங்காரம் மேலும் நாதம் விந்துவெனப் பிரிகின்றது. விந்து என்பது சுத்த மாயா தத்துவத்துட்பட்ட ஒன்று. இது ஒரு பரமாணுத்திரள். கட்புலனுக வரும்போது மின்னலாகவும் செவிப் புலனுக வரும்போது ஒலியாகவும் வெளி வருகிறதென அறிஞர்கள் கூறுகின்றார்கள். சிவசக்தி நேரே சென்று இயைந்து நிற்குமிடம் விந்து என்றும்; வட்டவடிவமான இவ்விந்து இயக்கம் பெற்றவுடன் அதிலிருந்து வரிவடிவில் நாதம் பிறக்கிறதென்றும் மெய்ஞானிகள் கூறுகின்றனர். இந்த விந்து நாத தத்துவத்தையே நாம் பிள்ளையார் சுழி என்கிறோம் (உ).

இலிங்க தத்துவமும் விந்துநாத சேர்க்கையையே குறிப்பதாகும். இலிங்கத்தின் வட்ட வடிவமான பாகம் விந்தாகவும், அதன் மேலுள்ள நீண்டு குவிந்த பாகம் நாதமாகவும் கொள்ளப்படுகின்றது. இவ்விரு சக்திகளுமே உலகத் தோற்றத்திற்கும், ஒடுக்கத்திற்கும் உறைவிடமாக உள்ளன. லிங் † கம் என்று சொல்லைப் பிரிக்கும்போது தன்னகத்தேயிருந்து பிரபஞ்சம் தோன்றுவதையும், பின்பு பேரூழிக் கால முடிவில் அவை தன்னகத்தே ஒடுங்கி விடுவதையும் குறிக்கிறது. விந்து நாத தத்துவங்கள் சுத்த மாயா தத்துவத்திற் குட்பட்டன என்று முன்பே கூறினேம். மா † யா என்னும் சொற்கள் பிறப்பிற்

கும் ஒடுக்கத்திற்கும் நிலைக்களனை ஒன்று என்னும் பொருளைத் தருவதையும் உற்று நோக்குவோர் அறிவர்.

இனி அகத்திலே கேட்கப்படும் ஓங்கார ஒலியையிட்டு சிறிது ஆராய்வோம். அகத்திற் கேட்கும் ஒலி நெஞ்சப் பையின் உள்ளுறுப்புக்களின் அசைவு. அவ்வசைவே அம்பலவாணனின் திருக்கூத்து. இத்திருக் கூத்தினாலேயே எம்பெருமான் ஐந்தொழில்களையும் செய்கிறான். இதனாலன்றோ,

''உய்ய என்னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா'' என்றார் மணிவாசகப் பெருந்தகை. எண்சான் உடலுக்கும் சிரசே பிரதானமல்லவா? ஏன் இறைவன் தலையை இருப்பிடமாகக் கொள்ளாமல் நெஞ்சப் பையை இருப்பிடமாகக் கொண்டான் என்பது ஆராயத் தக்க தொன்று.

இறைவன் பிறிதொன்றின் ஏவுதல் இல்லாமல் தானாகவே இயங்கிக் கொண்டிருக்கிறான். ஒரு நாளேனும் அவன் திருக்கூத்திலிருந்து ஓய்வு பெறுவானேல் இவ்வண்ட சராசரங்களின் கதியென்னவாகும் என்பதை நினைக்கவே பயமாக இருக்கிறது.

நம் மண்டையிலுள்ள உறுப்புகள் நாம் விழித்திருக்கும்போது இயங்கி, நாம் உறங்கும்போது உறங்கி விடுகின்றன. விழித்திருக்கும்போது நாம் பயப்படத் தக்க பெரிய பாம்புகூட, அயர்ந்து உறங்கும்போது நம்மேல் ஊர்ந்து சென்றாலும் நமக்குத் தெரிவதில்லை. ஆனால் நெஞ்சப் பையின் உள்ளுறுப்புகளோ விழிப்பிலும் உறக்கத்திலும் ஓவாது இயங்கிக்கொண்டேயிருக்கின்றன. அவற்றுள் மிக முக்கியமான உறுப்பு இருதயம். அதனுள் இருக்கும்வெளியே சிதாகாசம்எனப்படும் சிற்றம்பலம். இருதயம் துடிப்பதை நிறுத்திவிட்டாலோ ''தூங்கும்போது வாங்கும் மூச்சு சுழிமாறிப் போனாலும் போச்சு'' என்பதுபோல் போய்விடும். மூளை தன் தொழிலை மறந்துவிட்டால்கூட ஒருவன் உயிர் வாழலாம். ஆனால் இருதயம் தன் தொழிலை மறந்துவிட்டால் ஒருவனால் உயிர் வாழமுடியாது. எனவேதான் இறைவன் இதயத்துள் இருக்கிறான் என்று ஆன்றோர்கள் கூறுகின்றார்கள். ''உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'' என்பது சுவாமி விபுலானந்தரின் அறிவுரை.

உள்ளத்துள் உறையும் அம்பலவாணனை நாம் கண்டு இன்புற்று பேரின்படைய வேண்டுமானால், நம்மை மூடியுள்ள அகங்காரமென்னும் அழுக்கு அகல வேண்டும். இதை அருணகிரிநாதர்,

> ''ஆங்காரமுமடங்கா ரொடுங்கார்பர
> மாநந்தத்தே தேங்கார் நினைப்பு மறப்பு
> மறார் தினைப் போதளவும் ஓங்காரத்
> துள்ளொளிக் குள்ளே முருகனுருவங்
> கண்டு தூங்கார் தொழும்பு செயாரேன்
> செய்வார் யம தூதருக்கே'' என்றார்.

இந்த ஓங்கார ஒளியே அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பருள்ளக் கோயிற் கேற்றும் விளக்கு. ஆங்காரமற்றாரே யம்பலத்தான் ஆடலையறிவர். அதை அறிந்தவர் முடியாப் பிறவிக் கடலிற் புகார் முழுதும் கெடுக்கும் மிடியாற் படியில் விதனப் படார் என்று ஓதுகின்றார்.

இறைவன் திருப்பெருந் துறையில் குருவடிவில் வந்து குருந்தமர நிழலில் தனக்கு அருள் உபதேசம் செய்தது ஓங்காரப் பழமறையே என்பதை மாணிக்கவாசக சுவாமிகள் தனது திருவாசகத் திருமறையில் ''என்னை யோர் வார்த்தையுட் படுத்துப் பற்றினாய்'' என்று கூறுவதோடு,

''நையலார் மையலிலே தாழ்ந்து விழக்
கடவேனைப் பையவே கொடுபோந்து
பாசமெனுந் தாளுருவி உய்யு நெறி காட்டு
வித்திட் டோங்காரத் துட் பொருளை ஐயன்
எனக்கருளியவாறார் பெறுவார் அச்சோவே

என்னும் அச்சோப் பதிகத்தினால் தனக்கு உபதேசித்தது ஓங்காரத்தின் உட்பொருளே யல்லாமல் பிறிதொன்றில்லை என மிக அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றார். எனவேதான் சூக்கும பஞ்சாட்சரமாகிய ஓங்காரத்தின் தூல பஞ்சாட்சர மாகிய ''நமச்சிவாய'' என்னும் திருமந்திரத்தோடு அடிகளார் சிவ புராணத்தை ஆரம்பித்தார்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் திருநான் மறைகளின் முடிவிலே இறைவன் ஓங்காரமாகக் காட்சியளிக்கிறான், இவ்வுண்மையைத் தாயுமான அடிகளார்,

''தெய்வமறை முடிவான பிரணவ
சொரூபியே சித்தாந்த முத்திமுதலே —
தெட்சணமூர்த்தியே சின்மயானந்த
குருவே'' எனப் பகர்கிறார்.

மேலும் பழமறையான ஓங்காரத்தை தன் முடிந்த முடிபாகக் கொண்டிருக்கும் திருநான் மறைகளும் தமிழரின் தனித் தமிழ் மறைகளே யென்பதும், எம் பெருமான் அவற்றையே நால்வர்குக் கல்லாலின் கீழ் உபதேசித்தான் என்பதையும்

'' சுழித்த கங்கை தோய்ந்த திங்கட்
டொல்லாா நல்லிதழி சழித்த சென்னிச்
சைவவேடந் தானினைத் தைம்புலனும்
அழித்த சிந்தை யந்தணாளர்க் கறம்
பொருளின்பம் வீடு மொழித்த வாயான்
முக்கணுதிமேயது முதுகுன்றே''

எனவரும் திருஞான சம்பந்தரின் திருவாக்கால் அறிந்து கொள்ளலாம். மேலும் விரிவு வேண்டுவோர் சுவாமி மறை மலையடிகளின் சைவசித்தாந்த விளக்க நூல்களிலும் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எழுதிய திரு நான் மறை விளக்கம் (செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 1) என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையிலும் கண்டுகொள்க.

''ஓம்'' என்னும் ஒலிக்கு வரிவடிவம் கண்ட தமிழ் மக்கள் அதற்கொர் திருவுருவத்தை யுண்டாக்க முயன்றனர், அதன்பயனாகப் பிறந்ததே யானைமுகனின் திருவுருவம்.

''ஓம்'' என்னும் பழமறை தமிழுக்கே உரிய தென்பதை முன்னே விளக்கினோம். அது சைவத் திருமுறை பன்னிரெண்டிலுமே விரவிநிற்கிற தென்பதை சுவாமி மறை மலையடிகள் தான் இயற்றிய திருவாசக விரிவுரையில் பின்வருமாறு விளக்குகின்றார்.

''எல்லாம் ஓதாதுணர்ந்த திரு ஞான சம்பந்தப் பெருமான் அருளிய முதன் மறையின் முதற் பதிகத்தின் முதலில் 'தோடு' என்பதின் கண் தகர வொற்றின் மேல் ''ஓ'' என்னும் எழுத்தும், பன்னிரெண்டாம் திருமுறையாகிய திருதொண்டர் பெரிய புராணத்து இறுதிக்கண் ''உலகெலாம்'' என்பதன் ஈற்றில் மகர வொற்றும் நின்று தமிழ்ப் பன்னிரெண்டு திரு முறைகளும் ஓங்காரத்தின் பாலதென்பதனை இனிதுணர்த்துகின்றன.

எனவே தமிழ் நன் மக்களாகிய நாம் நம் பழமறையை அறிவால் அறிந்து உணர்வால் உணர்ந்து பேரின்ப வீடெய்துவோமாக.

ஓ மென்னும் ஓங்காரத் துள்ளே ஒரு
மொழி ஓ மென்னும் ஓங்காரத் துள்ளே
உருவரு ஓ மென்னும் ஓங்காரத் துள்ளே
பல பேதம் ஓ மென்னும் ஓங்காரம் ஒண்
முத்தி சித்தியே —திரு மந்திரம்—

**ஏ. பாக்கியமூர்த்தி**
2ம் வருடம்.

# கிராமிய இலக்கியம்

கிழக்கிலங்கையில் வசிக்கும் மூஸ்லிம் மக்கள் உல்லாச வேளைகளிலும் தொழில் செய்யும் நேரங்களிலும் நெடும் பிரயாணங்களிலும் சோர்வு ஏற்படாவண்ணம் கவிகளைப் பாடுவார்கள். இவைகளும் கிராமிய இலக்கியத்தின் பாற்படும்.

இக்கிராமியப் பாடலுக்கு நாம் இங்கு உசனையும், உமாவையும் காதலர்களாக்கி விஷயத்தைத் தொடங்குவோம்

உசன் மூன்று மாத காலம் வெளியூரிலிருந்து விட்டுத் தனது சொந்த இடத்துக்கு வந்தான். அவனது மைத்துனி பாய்க் கட்டைச் சுமந்துகொண்டு செல்கிருள். அவளின் மோகனப் புன்னகை நிறைந்த முகத்தையும் அன்ன நடையையும் கண்டான். ஆகா எனது சொந்த மாமன் மகளன்றோ இவள். முறைப்படி எனக்கே உரியவள். அந்த நினைவின் பேரில் தன்வசம் அவளை இழுப்பதற்காகக் கவியை இசைக்கின்ருன். ''தோட்டுப் பாய் கொண்டு செல்லும் தோகை மயிலாள்'' என்கின்ருன். உண்மைதான் பல வருணப் புற்களாலே இழைத்த பாயை அன்றோ தலையில் வைத்திருந்தாள். அந்தக் காட்சி அவனுக்கு மயிலை ஞாபகமூட்டுகிறது. தோகை மயில் தனது செட்டைகளை மடித்து வைத்திருக்கும்போது பார்ப்பதற்கு அழகாக இருக்கும். அவ்விதமே உமாவும் காணப்பட்டாள். அவளே தனது கிறுகிறுப்பைத் தீர்க்க வேண்டுமென நினைத்தான். அவள் மேற்கொண்ட அழியாத காதலன்றோ அது பதினலு வருடங்களாகக் கனிந்துவந்த காதல், அதற்கு அவளின் மனப்பூர்வமான சம்மதம் வேண்டுமே இவ் வாழ்க்கைப் படகை ஒருமித்து நடத்த. அதை நினைந்து,

> தோட்டுப்பாய் கொண்டு செல்லும்
> தோகை மயிலாளிடம்
> கேட்டுப் பாரையா! நமது கிறு கிறுப்பைத்
> தீர்ப்பாளென்று.

பாயைச் சுமந்து சென்று கொண்டிருந்த உமாவிற்கு உசன்கூறிய கவியின் உண்மை புரிந்துவிட்டது. அவளும் அவனின் அழகிலே தனது மனதைப் பறிகொடுத்து அவ்விடத்தை விட்டு அகல முடியாமல் நின்று கொண்டிருந்தாள். விளையாடியும் மச்சான் அல்லவா? பருவமடைந்த நாள் தொடக்கம் உசன், உசன் என்றல்லவா தியானித்துக் கொண்டிருந்தாள். அதன் பலன் இன்று கிட்டிவிட்டது. என்ருலும் அவனது வினவிற்கு விடையிறுக்க வேண்டும். அவனைப் பார்த்தவாறு அதிக நேரம் தெருவிலே நின்றுவிட்டாள். இன்னும் தாமதிக்க அவளின் பெண்மை இடம் கொடுக்கவில்லை. மேலே நடந்தவாறு கவியை இசைக்கின்ருள். உன்னை வாவென்று சொல்லி அழைப்பதிலே எனக்கு எத்தனை இன்பம் தெரியுமா? நாள் முழுவதும் உன்னுடன் கதைத்துக்கொண்டிருக்கவே ஆசை. வாவென்று அழைக்தால் நீர் வருவீர் நான் இருப்பதற்குப் பாய் தரவேண்டும். ஆனல் இதை வாப்பா அறிந்தால் என்னைச் சும்மா விடுவாரா? என் தலையே போய்விடும்.

ஏனென்முல் நான் கலியாணம் என்னும் கூட்டினுள் அடைபடாமலிருப்பதால்; அந்தப் பாக்கியத்தைத் தானே எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதை நீர் தான் அகற்ற வழி செய்ய வேண்டும். வீட்டிற்கு நான் அழைக்கவில்லையென்று குறையாக எண்ணுதே என்று பதில் கவி இசைக்கின்முள்.

வாவென்று அழைத்திடுவேன்
வாசலிலே பாய் தருவேன்
வாப்பா அறிந்தால் வாளெடுத்து
வீசிடுவார்.

கவி உசனின் காதில் ஒலிக்கிறது. உசன் துண்டை உதறித் தோளிலே போட்டுக் கொண்டு அவளைப் பின் தொடர்கிறுன். பின்னுல் தான் போனுலும் வாய் கவி இசைக்கத் தொடங்குகிறது. பின்வரும் கவியை இசைக்கிறுன்.

கடலில் மடல் அழகி
கஸ்தூரிப் பொட்டழகி
வாழை மடலழகி—உன்
வாழ்வு கலியாணமெப்போ.

அம்மட்டா இன்னும் இசைக்கிறுன்.

தாலிக் கொடியே என்
தாய் மாமன் ஈன்ற கன்றே
மாமிக் கொரு மகளே—உன்
வாழ்வு கலியாணமெப்போ.

கவி இரண்டின் அர்த்தமும் உமாவின் காதிலே ஒலிக்கிறது. எனது கலியாணம் எப்போ என்று வினவுகிறுரே எதற்காக நான்தானே வாழ்வு கலியாணத்தை அவரிடம் ஒப்படைத்துவிட்டேன். விதியை நொந்து கவியை இசைக்கிறுள்.

பட்சமிருக்குப் பறக்கச் சிறகிருக்கு
எண்ணமிருக்கு எழுத்துவண்ணம்
எப்படியோ

கவி உசனுக்குப் புரிந்துவிட்டது. கவி இசைக்கிறுன்.

எண்ணமிருக்கு எழுத்து வண்ணமும்
உண்டோ
கண்ணுன வாப்பா காப்பறையில்
அடைப்பரோ.

கவி உமாவுக்குப் புரிந்துவிட்டது. ஆகா! என்னில் தான் அவருக்கு எத்தனை அன்பு. மனமொத்த காதலர்களின் முன் வாப்பா என்ன செய்யமுடியும். வாழ்க்கையை நடத்துவது நான்தானே. அதற்காகத் தனிமையிலே கண்டு உசனேடு பேசி மகிழ்வதற்காப் பூவலடிக்குப் பொழுது படும் நேரம் வரும்படி இசைக்கிறுள்.

''சந்தண மரத்தைச் சந்திக்க
வேண்டுமென்றுல்,
பூவலடிக்கு மச்சான் பொழுதுபட
வந்துபோ''

கவி உசனுக்குப் புரிந்துவிட்டது. அந்தி படும் நேரம் எப்போ வருமென்று புழுவாய் துடித்துக் கொண்டிருந்தான். அப்போ மாலை நேரமாகிவிட்டது. பூவலடிக்குச்சென்று உமாவின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். மலர்ந்த முகத்தோடு மின்னலிடை துவள அன்னத்தின் சாயல்போல உமா உசனை நோக்கி வந்தாள். உசன் உமாவின் பக்கத்தில் சென்றுன். சந்திரனும் மேல் வானத்தில் வந்து கொண்டிருந்தான். அவளும் அவனை நெருங்கி வந்துகொண்டிருந்தாள். ஆ! என் உமா உள்ளக் கோயிலிலே குடி கொண்ட மோகினியே, அன்று எழுதியதை அழித்தெழுத முடியாத ஓவியமே, அன்புச் சிலையே என்றவாறு தன் கரங்களை நீட்டுகிறுன். மறைந்திருந்த அன்பே! மனதைப் பறிகொடுத்த மச்சானே! என்றவாறு அவன் கரங்களைப் பிடித்துக் கொள்கிறுள். காதலர்களின் உல்லாச வேடிக்கையைக் கண்டு சந்திரனும் வெட்கமுற்று தனது காதலியைத் தேடி மேகத்துள் ஓடி ஒளிக்கின்றுன்.

இவ்வாறு பல கவிகள் நேரப் போக்கிற்காகப் பாடப் பெறுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை அகப் பொருட்டுறையைத் தழுவி நிற்பதை நாம் காணலாகும். இவை நமது நாட்டின் பொக்கிஷங்கள் என்பதை மறவாது போற்றிப் பாதுகாப்போமாக.

**பீ. வேலுப்பிள்ளை**
1ம் வருடம்.

# காப்பவள் பெண்மணியே!

1

பெண்ணிற் பெருந் தக்க யாருளரே—புவி
பேணும் அவள் ஒரு தெய்வமன்றோ
கண்ணை இமைகள் காப்பது போலவே
எம்மையும் காப்பவள் பெண்மணியே.

2

பெண்ணினமே படைக்கின்றாள் எமைப்—பிழை
எண்ணினமோ எல்லாம் பட்டு விடும்
தண்மை மென்மை அவள் ஆட்சியுடன்
தாயகம் காத்தல் தலைப் பணியே.

3

உண்மை இதுவே உரைத்திடவேண்டில்—இவ்
வுலகினில் பெண்மை உயர்வுறுக
கண்ணிருந்தும் குருடர்கள் அல்லர் நாம்—அவர்
கட்டளை மீறல் நலமும் அல்ல.

4

தாய்மை ஒன்றுமே சொந்தமல்ல—உடல்
தாரணி மீதினில் உள்ளவரை
காதலி காட்டிய பாதையிலே வந்து
காண்பார் கணவரும் தூயநெறி.

5

இராச பீடத்தில் ஏறி விட்டார்—பெண்கள்
இருந்தும் பெண்மைக்கு ஏற்ற இடம்
இன்னும் உலகினில் எங்கு உண்டோ
இவள் ஏற்க இனுமொரு பதவியுண்டோ

6

பெண்மைக் கொரேயொரு நற்பேரும்—அவள்
பெண்ணல்ல தெய்வப் பிறவி அன்றோ
அன்று இருந்து மறைந்து விட்டாள் ஒரு
ஔவைப் பிராட்டியாம் யார் அறியார்.

7

இல்லறம் தன்னிலே மட்டுமல்ல—புவி
ஈரேழும் போற்ற உயர்ந்த பெண்கள்
நல்லறம் செய்தவர் நாட்டில் விதைத்திட்ட
நன்மணி முத்துகள் இன்னுமுண்டு.

8

பெண்மைக்குரிய இடம் கொடுப்போம்—அவர்
பேணி நடப்பது நம் கடன் காண்
தொன்மை மிகுந்த முற்காலமெல்லாம் எங்கும்
தோன்றிப் புகழ் செய்தார் பெண்கள் அன்றோ.

**செல்வி அமிர்தம் தம்பாப்பிள்ளை**
1ம் வருடம்.

★

—சிறு கதை—

# காலத்தின் வஞ்சனை

அன்று வெள்ளிக்கிழமை—

அப்போதுதான், இரவு மணி 10 அடித்தோய்ந்தது. என் உடம்பு குளிரால் தன் நிலையை இழந்திருந்தது. காரணம், வெளியில் மழை பலமாகப் பெய்து கொண்டிருக்கிறது. இடையிடையே மின்னல்—அதனைத் தொடர்ந்து முழங்குகிறது வானம். நான் 'தலைப் பிள்ளை' முழங்கும்போது சற்றுப் பயமாகத்தான் இருக்கிறது. அந்த நாளில் என் பாட்டி சொன்ன கதை, என்னை மின்னல்—முழக்கத்தைக் கண்டு பீதிகொள்ள வைக்கிறது. அப்புறம் பயமில்லாமலா இருக்கும்? வானம் முழங்கி, இடியேறு தலைப்பிள்ளையின் தலையில்தானமே விழுமாம்!

கட்டிலிற் படுத்தபடியே போர்வையை இழுத்து நன்றாக மூடிக்கொள்ளுகிறேன். கலாசாலைக் கட்டிலென்றால் கேட்க வேண்டுமா, என்ன? உலகத்திலுள்ள மூட்டைகள் அத்தனையும் வாசம் செய்யும் கட்டில்களாச்சே அவைகள்! மூட்டைக்கடி மட்டுமென்றால் பரவாயில்லையே! இந்தக் கேடுகெட்ட நுளம்புக் கூட்டம் வேறு, ஊசிபோட்டுத் தொலைக்கிறதே! காதுக்குள்தானா இந்த நுளம்பு வந்து காதற் கீதம் பாடவேண்டும்?......

கலாசாலை மின் விளக்குகள் கைம்பெண்ணின் முகம்போல அழுது வடிந்து கொண்டிருந்தன. என் தலைக்கு மேலே எரிந்து கொண்டிருந்த மின் விளக்கைச் சுற்றி ஒரு விட்டிற் பூச்சி பறந்துகொண்டிருந்தது. அதேபோல் என் எண்ணமும் என் மனைவியைச் சுற்றியே பறந்துகொண்டிருக்கிறது.........ஆமாம்! அவள் இன்று இரவு 11 மணிவரை, அத்தான் வருவார், முத்தம் பல தருவார் என்று என்னை எதிர்பார்த்துக் காத்திருப்பாள்! பின்...... பாவம்! ஏமாந்து போவாள். காரணம்......!

இந்த வாரம் நான் கலாசாலைக்கு வரும்போது. "அத்தான், வருகிற வெள்ளிக்கிழமையே வந்துவிடுங்கள். சனிக்கிழமை பகற் படக் காட்சிக்குப் போவோம்" என்று எவ்வளவு ஆசையாகச் சொல்லி வைத்து வழியனுப்பினாள். நானும், "காத்திரு கண்ணே கட்டாயம் வருவேன்" என்று கூறித்தானே வந்தேன். ஆனால்.......... இன்று என்னால் போக முடியவில்லை! "இந்த வாரம் ஒருவரும் வீட்டிற்குப் போகக் கூடாது" என்று அதிபர் விளம்பரப் பலகையில் விளம்பரம் போட்டுவிட்டார். அதனால் இன்று என்னால் போக முடியவில்லை—முடியவேயில்லை!!

சே! அவளை இன்றும் நான் ஏமாற்றி விட்டேன். இதற்குமுன் ஒருநாள், நானும் என் மனைவியும் புறப்பட்டுக்கொண்டு பட மாளிகைக்குச் சென்றோம். என்ன செய் வது ....? அன்று பாழும் மின்சாரத் தடை யால் படக் காட்சியே இல்லை! ஏமாந்து வீடு திரும்பினோம்.

எனக்கும் அவளுக்கும் திருமணமாகி இன்னும் ஒரு மாதங்கூட ஆகவில்லை. அதற்குள்ளாக இரண்டு தரம் அவள் ஏமாற்றப்பட்டுவிட்டாள். இன்று என்னை எதிர்பார்த்திருந்து, 11 மணிக் கடைசி 'பஸ்'சிலும் நான் வராதது கண்டு, வெண் ணிலாபோன்ற அவள்தம் வதனம், வாடி வடிவிழந்தே காணப்படும். கச்சான் காற் றுக்காற்றுது அறுபட்ட கொடிபோலத் துவண்டுபோவாள். புனல்விட்ட மீன் போலத் துடிப்பாள். பின் "அத்தான் என்னை ஏமாற்றிவிட்டார்" என்று, எனது போட்டோவின் முன் நின்று நெஞ்சம் குமுறுவாள். பிஞ்சு மனம். 'முதற் கோணிஞல் முற்றும் கோணும்' என்று தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டு, சிந்தனையிற் தலையை உடைத்துக்கொள் வாள். சூடியிருக்கும் எனக்கு விருப்பமான மல்லிகை மலர்க்கொத்தை — எடுத்து, மூலையிலே எறிந்துவிட்டுக் கண்ணீர்க் கட லில் மிதப்பாள். அத்தான் வந்ததும்தான் உண்ணுவோம் என்று எண்ணி, இன்று உண்ணுமலேயே விட்டுவிடுவாள். பாவம்! என்ன செய்வேன்? .....

ஆ! மூட்டையொன்று கடித்துவிட் டது. புரண்டு படுக்கிறேன். விடுதிச் சாலைக்குள் வெளிச்சமே இல்லை. விளக்கு கள் எல்லாம் அணைக்கப்பட்டாகிவிட் டன. எப்போது அணைத்தார்கள் என் பதே எனக்குத் தெரியாது. அவ்வளவு தூரம் சிந்தனையில் மூழ்கியிருந்தேன். வெளியில் மழை சற்று வேகத்தைக் கூட்டிக் கொண்டு பெய்கிறது. இந்த வானம் யாருக்காகத்தான் இப்படிக் கண்ணீர் வடிக்கிறதோ!..............

என் சிந்தனைக்குதிரை மீண்டும் என் மனைவியை நோக்கியே ஓடியது—அவளது சுருள்படாத கூந்தலும், மூன்றும் பிறை போன்ற நுதலிலிட்ட வட்ட நிலாப் பொட்டும், சேல்விழியும், சிரித்திட்டால் சிறிது குழிவிழும் கன்னமும், கிளிச் சொண்டு மூக்கும் பவளத்துண்டு உதடு களும் என்சிந்தனையில் நிறைந்து, என்னை வருத்தி, என்னை அணுகிய நித்திரா தேவியை விரட்டிவிட்டன.

மூட்டைக்கடியாலும் தூக்கமின்மை யாலும் புரண்டு புரண்டு படுத்தேன். இப் பொழுது மழை நன்முக ஓய்ந்துவிட்டது. எங்கிருந்தோ ஒரு சேவல்கூவும் சத்தம் கேட்டது. இரவின் அமைதி குலைக்கப்பட் டது. அதைத் தொடர்ந்து பல சேவல்கள் தங்கள் வாய்வரிசையைக் காட்டின. சேவல் சத்தத்திற்குப் பீதி கொண்ட கடிகாரம், 3 முறை அடித் தோய்ந்தது. இதன்பின், நித்திரைப் புத்திரி என்னை எப்படித்தான் அணைத்தாளோ, எனக் கெப்படித் தெரியும்!

* * *

மறுநாள் விடிந்தது — சனிக்கிழமை. எனக்கு விடுதிச்சாலையும் கலாசாலையும் வெறுத்து விட்டதுபோன்ற ஓர் உணர்வு. கலாசாலை தொடங்கியது. விஞ்ஞானப் பாடம் நடந்து கொண்டிருந்தது. பாட நேரத்தில் வகுப்பில் முன் வரிசையிலிருக் கும் நான், இன்று கடைசி வாங்கில் இருக் கிறேன். என் 'கட்டை' தான் வகுப்பில் இருந்ததே தவிர, என் புலன்களெல்லாம் பாடத்தின்மீது செல்லவில்லை. 'எப்படி யும் வீட்டிற்கு இன்று போகவேண்டும்' என்ற சிந்தனையில், கடி வாளமில்லாத

குதிரைபோல, என் எண்ணம் அலைந்து கொண்டிருந்தது.

—இந்த மனம் இருக்கிறதே, ஐம் பொறிகளையும் அடக்காவிட்டால், அது குரங்கேதான்! எனது மனக் குரங்குதான் பாய்ந்துபோய் மணியை அடித்ததோ என்னமோ, பாடம் முடிவுற்றது. எழுந் தேன். நடந்தேன் அதிபரின் அலுவலகம் நோக்கி! அப்போது எனது நிலை, இயக்கி விட்ட பாவைபோல இருந்திருக்கும்!

"ஐயா, எனக்கு இன்று லீவு வேண் டும். எனது தம்பிக்கு சுகமில்லை. நான் கட்டாயம் போகவேண்டும்" என்று எனக்கே உரித்தான பாணியில், ஒருவித பீடிகையுடன் கேட்டேன். இல்லை, கெஞ் சினேன். அதிபர் என்னை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார். என்ன நினைத் தாரோ, "சரி போ" என்றார் சிறையி லிருந்து விடுபடும் ஆயுள் தண்டனைக் கைதியடையும் மகிழ்ச்சிபோல, அப் போது நான் மகிழ்ந்தேன்.

